Registered as a Newspaper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

## தலைவர் பிரபாகரனின் கருத்துத் தொகுப்பு

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் கருத்துக்களின் தொகுப்பு, நூல் உருவில் வெளிவந்துள்ளது. ''எனது மக்களின் விடுதலைக்காக'' என்ற தலைப்பில் கடந்த பத்து ஆண்டுகளாகத் தலைவர் பிரபாகரன் பத்திரிகைகளுக்குவழங்கிய செவ்விகள் மற்றும் அவ்வப்போது தமிழீழவிடுதலைப் போராட்ட சூழ்நிலையை விளக்கி அவர் வெளியிட்ட அறிக்கைகள், சமூகப் பொருளாதார பண்பாட்டுப் பிரச்சினைகள் குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்கள் ஆகியன அடங்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது. 315பக்கங்களைக்கொண்ட இந்நூலில் தலைவரின் பல புகைப்படங்களும் இடம்பெறுகின்றன.

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 13 (29-10-1993) வெள்ளிக்கிழமை ஓசை 253

# பல்கலை. அனுமதி முறையை கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணி

## மகஜர்கள் கையளிப்பு

(நமது நிருபர்)

1992/93 ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு அறிவிக்கப்பட்ட வெட்டுப்புள்ளியால் பாதிப்படைந்த மாணவர்கள் நேற்று யாழ்நகரில் நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணியில் பெருமளவு பாடசாலை மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும், பாதிப்படைந்த மாணவர்களும், பெற்றோர், பொதுமக்களும் கலந்து கொண்டனர். இவர்கள் கொட்டும் மழையிலும் கோசங்களை எழுப்பியவாறு சென்று அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகராலய வதிவிடப் பிரதிநிதியிடமும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதியிடமும்,மேலதிக அரசாங்க அதிபரிடமும், கல்விப் பணிப்பாளரிடமும் மகஜர்களை சமர்ப்பித்துள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமாவதற்கு முன்னர் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் பொதுக்கூட்டமொன்றை நடாத்தினர். இக் கூட்டத்தில் யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி, மருத்துவதுறைபீடாதிபதி, கணிதத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் இன்பன் மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் உரை நிகழ்த்தினர்.

பேரணி பல்கலைக் கழகத்திலிருந்து புறப்பட்டு பலாலி வீதி, அரசடி வீதி. கோவில் வீதி யூடாக யாழ். செயலகம் சென்று பின்னர் கல்வித் திணைக்களம், நல்லூரூடாக யாழ். பல்கலைக் கழகத்தைச் சென்றடைந்தது. இம்மாணவர்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த செய்திகளை வெளியிட படை அதிகாரிகளுக்கு தடை

(கொழும்பு)

சிறிலங்காவில் யுத்த நிலைமை தொடர்பான செய்திகளை இனிமேல் எந்த இராணுவ உயர் அதிகாரியும் வெளியிட முடியாது என்றும் அவ்வாறு யுத்த நிலைதொடர்பாக கருத்துக்களை வெளியிடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராணுவ தளபதி எச்சரிக்கை செய்துள்ளார்.

இது தொடர்பாக சகல இராணுவ முகாம்களிற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இராணுவ நடவடிக்கையின் முடிவுகளை வெளியிடுவதற்கு இராணுவ உயர் அதிகாரி ஒருவர் நியமிக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## குடியிருப்பாளர்களை பதிவு செய்ய கோரிக்கை

வடபகுதியை விட்டு வெளியேறிய உரிமையாளரின் வீட்டில் இருக்கும் குடியிருப்பாளர்கள் வரும் டிசெம்பர் 31-ம் திகதிக்கு முன்னர் இயக்க நலன் பகுதியில் பதிவு செய்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

வலிகாமம் பிரிவைச்சேர்ந்தவர்கள் கந்தர்மடத்திலும் தென்மராட்சி பிரிவைச்சேர்ந்தவர்கள் சாவகச்சேரியிலும் வடமராட்சி பிரிவைச் சேர்ந்தவர்கள் மாலுசந்தியிலும் உள்ள இயக்க நலன் பகுதியில் பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு-கிழக்கு இணைப்பை நீக்க நடவடிக்கை

### ஜனாதிபதி விஜேதுங்க தெரிவிப்பு

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள போதிலும் அந்த இணைப்பை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி நகரசபையில் மாவட்ட அரசாங் உத்தியோகத்தர்கள் முன்னிலையில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார்ஊர்திஓடிச்சட்டம் பதிவு செய்யக் கோரல்

எதிர்வரும் 01. 11. 93 தொடக்கம் 10. 11. 93 வரையான காலப்பகுதியில் சகல மோட்டார் ஊர்திகளின் அடிச் சட்டம் வைத்திருப்போரும். மோட்டார் ஊர்தியின் இயந்திரங்கள் வைத்திருப்போரும் அவற்றிற்கான பதிவுகளை கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியில் கிழமை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரையும் சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி

(10ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

கிளிநொச்சி மாவட்டச் சிறப்புப் பொறுப்பாளர் லெப். கேணல் நாயகன் (நரேஸ்) உருவப்படம் உள்ளே.

## தங்கையே !

மின்னல் குடியிருக்கும் கண்ணைத்திற
விடுதலைக்குத் தேதி குறி
வண்ணக் கனவுகளைத் தூக்கி எறி
வா களத்துக்கு வரலாறு படைக்கலாம்

### தமிழ் இளைஞர் கடத்தல்

## புளொட் - பொலிசார் பரஸ்பரம் குற்றச்சாட்டு

[கொழும்பு]

கொழும்பில் தமிழ் இளைஞர், யுவதிகள் கண்டபடி கைது செய்வது குறித்து அரச தரப்பும் 'புளொட்' தமிழ்குழுவும் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேற்படி தமிழ் குழு அல்லது இதில் இருந்து பிரிந்து சென்ற குழுவினரே இக்கடத்தல்களுக்குப் பொறுப்பு என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இக் குற்றச்சாட்டுக்களை இந்த தமிழ்க் குழு மறுத்துள்ளதுடன் பொலிசாரே இக் கடத்தலுக்குப் பொறுப்பு என்று குற்றம்சாட்டியுள்ளது.

கொழும்பில் செயற்படும் தமிழ்க் குழுக்கள் இவ்வாறான கடத்தல்களுடன் சம்பந்தப்படவில்லை என்ற கூற்றை கொழும்பு வாழ் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என பி. பி. ஸி தெரிவித்தது.

## சமஷ்டி அமைப்பு குறித்து ஆராய்வது அவசியம்

### கொழும்பு பல்கலை துணைவேந்தர்

இலங்கையில் சமஷ்டி அமைப்பை ஏற்படுத்தும் வாய்ப்பு குறித்து ஆராய்வது அவசியமாகும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் கூறியுள்ளார்.

இலங்கை இந்திய சங்கத்தின் ஆதரவின் கீழ் 1993 ம் ஆண்டு மகாத்மா காந்தி நினைவு சொற்பொழிவாற்றிய அவர்ஒருங்கிணைந்த நாடாக இலங்கை இருப்ப

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அநுராவுக்கு கல்வி அமைச்சு ஐ. தே. க. முடிவு

(கொழும்பு)

சுதந்திர கட்சியில் இருந்து தனது பதவியை இராஜினாமா செய்துள்ள அநுரா பண்டாரநாயக்காவுக்கு கல்வி அமைச்சர் பதவியை வழங்க ஐக்கிய தேசிய கட்சி முடிவு செய்துள்ளதாக தெரிய வருகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க )

### பலநோக்கு கூட்டுறவு சங்கங்'கள்

## முற்பணம் செலுத்தியே பொருள்களை பெறவேண்டும்

யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நவம்பர் முதல் முற்பணம் செலுத்தினால் மட்டுமே அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படும் என புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது

பலநோக்குக் கூட்டுறவுச் சங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் தொண்டமான் பதவி விலக முடிவு?

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான சௌ. தொண்டமான் தனது அமைச்சர் பதவியை ராஜினாமாசெய்யவும், ஆளும் ஐக்கியதேசியக் கட்சியுடனான தொடர்பைத் துண்டித்துக் கொள்ளவும் திட்டமிட்டுள்ளார் என ஏஜென்சிசெய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைக் காலங்களில் அவரது கருத்துக்கள் அரசாங்க உயர் மட்டத்தில் விமர்சிக்கப்பட்டதாகவும் அவர் மனங் குழம்பிய நிலையில் காணப்பட்டார் எனவும் அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை அமைச்சர் தொண்டமான் எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த திட்டமிட்டுள்ளதாகவும் இதற்கான முயற்சிகள் இவ் வாரத்தில் எடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

அண்மையில் மலையகத்தில் மேற்கொள்ளப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ள வேலை நிறுத்தங்களிற்கு பூரண ஒத்துழைப்பு தர தாம்தயாராக இருப்பதாக அமைச்சர் தொண்டமான் அறிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

## வரி விளம்பரம்

### புலமைப்பரிசில் பயிற்சி

புதிய கல்வி நிலையத்தால் விஜயதசமியன்று வெளியிடப்பட்ட 21 கட்டுரைகளையும், 10 மாதிரிப் பயிற்சிகளையும் கொண்ட புலமைப் பரிசில் பயிற்சி நூலை எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். எம்மிடம் நேரடியாகப் பெறுபவர்களுக்கு விசேட கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம், 219, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.
(6408)

### மகாதேவா ஜோதிடம்

உறுதியான பலாபலனை அறியலாம் 239, ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்தி காலை 10.00- 1.00 மணி. 140 செல்லர் வீதி, கல்வியங்காடு, பிற்பகல் 3.00-6.00 வரை சந்திக்கலாம்.
[63 36]

### இரணவிலவில்

படமாட்டாது'' என அறிவித்தார். ஆனால் இதுவரை ஏற்பட்ட பாதிப்பே போதும் என மக்கள் கூறுகின்றனர்

உலகில் இதுவரை வோய்ஸ் ஒவ் அமெரிக்காவின் 13 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன அவ்வாறு அமைக்கப்பட்ட நிலையங்கள் யுத்தகாலத்தில் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. இதனால் அவுஸ்ரேலியா, பிலிப்பைன்ஸ், இஸ்ரேல் போன்ற நாடுகள் ஆரம்பத்தில் அமெரிக்க வானொலி நிலையத்தை அமைக்கச் சம்மதித்திருந்த போதிலும் பின்னர் அதற்கு மறுத்துவிட்டன.

மேலும் இலங்கைக்கு தென் மேற்காக 700 கி.மீ தூரத்திலுள்ள டியாகோ கார்சியா தீவை இவ்வானொலி நிலையத்தை அமைக்கவென பிரிட்டனிடமிருந்து 99 வருட குத்தகைக்கு பெற்றுக்கொண்ட அமெரிக்கா 1971 இல் அங்கு இராணுவத் தளத்தை அமைத்துக்கொண்டது

அமெரிக்காவுடன் சுமுகமான உறவுகள் இல்லாத ஆசிய கிழக்கு ஆபிரிக்கநாடுகளுக்கு இத்தளம் அச்சுறுத்தலாக உள்ளது. 4.8 கிலோ மீற்றர் அகலமும் 6.4 கிலோ மீற்றர் நீளமும் கொண்ட இத்தீவு அமெரிக்காவின் கைக்குச் சென்றதும் அத்தீவிலிருந்த மக்கள் விரட்டியடிக்கப்பட்டு பத்து வருடங்களில் ஒருபெரிய இராணுவத் தளமாகியது. இந்த தளம் அமைக்கப்பட்ட காலத்தில் இலங்கை அதனை எதிர்த்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா தென்னாசிய பிராந்தியங்களில் தனது தளங்களை விஸ்தரித்து வரும் சூழ்நிலையில் இரணவிலவில்தடை செய்யப்பட்ட கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் யாரும் தலையிட முடியாத, உள்ளே நடப்பதை யாரும் அறிய முடியாத ஒரு ''குட்டி அமெரிக்கா'வாக இவ் ஒலிபரப்பு நிலையம் உருவாகி வருவதை அப் பகுதி மக்கள் அச்சத்துடன் பார்க்கின்றனர்.

அண்மையில் இப்பகுதிக்குச் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்த சிலாபம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஹரோல்ட் ஹேரத் ''உங்களுக்கு எதுவித தீங்கும் ஏற்படப்போவதில்லை வீதி அகலமாக்கப்படும்போது யாருக்காவது இடத்தைவிட்டு வெளியேறவேண்டி ஏற்பட்டால் அதற்குண்டான செலவை நாங்கள் தருகிறோம் உங்களுக்கு மின்சாரம் வேண்டாமா? என்று கேட்டிருக்கிறார்.

அதற்கு பதிலளித்த பிரதேச வாசியொருவர் ''உங்களுக்கு நாங்கள் வாக்களித்தது எங்களிற்கு சேவை செய்வதற்காகவே. நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கும்போது எங்களுக்கும் வழங்குங்கள் அந்த வசதியைப் பெற அமெரிக்க வானொலியோ ஹோட்டலோ இங்கு அவசியமானது இல்லை. எங்கள் பிள்ளைகளுக்கு 'எயிட்சைவிட' குப்பிலாம்பு வெளிச்சமே போதுமானது'' என்றார்

### வியாழன், சனி செவ்வாய் மாற்றங்கள்

நவம்பரில் மீண்டும் (கும்பத்திற்கு) சனி மாற்றமும், (சத்யாவின்) எண்ஜோதிடமும் ரூ. 10/-- விற்பனையாகின்றது. தீபாவளி, வாழ்த்துக்கள், சஞ்சிகைகள், பாடசாலை உபகரணங்கள். வடிவேல் புத்தகசாலை K.K.S வீதி யாழ்ப்பாணம். (6415)

### வீட்டுத்தோட்டம்

வீட்டுத்தோட்டத்தில் மண்ணில் வளம் பெருக்க சந்தி., பயிர் பாதுகாப்பாகவும், அடிக்கட்டு பசளையாகவும்'' நீமியா''. வீட்டில் விளக்கெரிக்கவும், நுளம்பை விரட்டவும் ''நீமாரொக்ஸ்''. நல்லூர் சிவன் கோவில் எதிரே அபிராமி அங்காடியில் விற்பனையாகிறது. ''மில்க்வைற்''
(சி/7792)

வட இலங்கை சங்கீதசபை

## ஆண்டு பொதுக்கூட்டம்

14. 11. 1993 ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணிக்கு யா/யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும். ஏற்கனவே பிரேரணைகள் வந்திருக்கின்றன- மேலும் பிரேரணைகள் அனுப்புவோர் 10-11-1993க்கு முன்னர் எழுத்து மூலம் சபைக்கு அனுப்பி வைக்கவும். சந்தாப்பணம் செலுத்த வேண்டிய இறுதிநாள் 5-11-1993

**இ. சுந்தரலிங்கம்**
யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளரும்,
வட இலங்கை சங்கீத சபைத் தலைவரும்.

[சி/7800]

உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்
உடுப்பிட்டி

## வெற்றிடங்கள்

யாழ். மாவட்டததில் வசிப்பவர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. பதவி:- கணக்காளர் 104/10
வேதனம்:-1005/- 40X5-50x10-1705/-
வயது:- 1-11-1993-ல் 25ற்கும் 45ற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
கல்வித்தகைமை:- குறியீட்டு இலக்கம் 11-ல் அமைந்த கணக்குப் பதிவுநர்/ எண் பார்வை எழுதுநர் பதவியில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது குறியீட்டு இலக்கம் 12-ல் அமைந்த இதே பதவிகளில் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்,

அல்லது

ஐக்கியராச்சிய கணக்கு வைப்போர் தராதர இறுதிப் பரீட்சையில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குவைத்தல், கணக்கு ஆய்வு செய்தல் சம்பந்தப்பட்ட பதவிகளில் 02 வருடத்திற்கு குறையாத மேற்பார்வை அனுபவம் அல்லது ஐக்கியராச்சிய கணக்கு வைப்போர் பரீட்சையில் இடைநிலை பிரிவுச்சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குவைத்தல், கணக்கு ஆய்வு போன்ற பதவிகளில் மேற்பார்வை தரத்தில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவு வேலையாளர் தராதரம் (உயர்தரம்) அல்லது கல்வித்தராதரப்பத்திரம் உயர்தரத்தில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் பெற்ற சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் கணக்கு வைத்தல், கணக்குஆய்வுசெய்தல் போன்ற பதவிகளில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

2. பதவி:- தட்டச்சாளர் (தமிழ்/ஆங்கிலம்) 305/15
வேதனம்:- 730/- 20x15 - 25 05 - 1055/-
வயது:- 1-11-1993-ல் 20ற்கும் 35ற்கும் இடையில்
கல்வித்தகைமை;- தமிழ், ஆங்கிலம் உட்பட க. பொ. த (சாதாரண தரம்) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி. இத்துடன் தட்டச்சு தமிழ்-20 சொற்கள், ஆங்கிலம்-30 சொற்கள் குறையாத வேகம் விண்ணப்பதாரர், வேகப்பரீட்சை, செய்முறைப்பரீட்சை என்பவற்றில் தோற்ற வேண்டும்.

பொது;- 1. மேற்குறித்த இருபதவிகளுக்கும்குறிப்பிட்ட வேதனத்திட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

2. சங்க எல்லைப்பரப்பில் வசிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3. விண்ணப்பங்களை சுயமாக தயாரித்து பிறப்புச்சான்றிதழ் கல்விச்சான்றிதழ் அனுபவச்சான்றிதழ் மற்றும் நற்சான்றிதழ் என்பவற்றின் பிரதிகளுடன் பொது முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், உடுப்பிட்டி என்ற விலாசத்திற்கு 5-11-1993 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மூலையில்பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

4. தட்டச்சாளர் பதவிக்கான வேகப்பரீட்சை செய்முறைப்பரீட்சை என்பனவும் இருபதவிகளுக்குமான நேர்முகத்தேர்வும் 7-11-1993 முற்பகல் 9.00 மணிக்கு சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும். விண்ணப்பித்தோர் அன்றைய தினம் நேர்முகத் தேர்வுக்கு தோற்ற வேண்டும். தனித்தனி கடிதங்கள் அனுப்பி வைக்கப்படமாட்டாது.

**பொது முகாமையாளர்**

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
உடுப்பிட்டி,
28-10-1993
((5859)

## 31-ம் நாள் நினைவு

மலர்வு:
24. 06. 1968

வீரச்சாவு:
29. 09. 1993



## மேஜர் செல்வம்

(சோமு முருகேசு)
(5-ம் கட்டை எருக்கலம்பிட்டி, மன்னார்)

தொலைப்போம் எதிரியை தொடட்டும் எமது நாட்டை
கலைப்போம் அவனை தலைதெறித்தோடவென்று
விலைபேச முடியா வீரம் காட்டி
வித்தானாய் தமிழீழத்திற்கு......
செல்வமே உனக்கு வீர அஞ்சலி.

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீர அஞ்சலியை தெரிவிப்பதோடு, அன்றைய தினம் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு சக போராளிகள், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்
அத்தான், அக்கா, மருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

செ சோமசுந்தரம்
கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(6411)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு :
09-06-1934

உதிர்வு :
29-10 1992

## A. கொன்ஸ்ரன்ரைன் பீரிஸ்

(இளைப்பாறிய C.T.B. D.I)

நினையாத நேரம் அணைந்த ஒளிவிளக்கே
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ
எம் துயரம் மீண்டும் வரும் நினைவலையால்
உருகியழும் எம்முள்ளம் எந்நாளும் உங்களையே
எண்ணுதப்பா, தங்கள் ஆசியும் அறிவுரையும்
எம்மை வழி நடத்துமப்பா.

என்றும் தங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்,

15/1 A டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.
அன்பு மனைவி, மக்கள்,
மருமகன், உறவினர்கள்.
(6412)

## நினைவு கூருகின்றோம்:..
## 1993- 10- 29

1984ஆம் ஆண்டு யாழ் - தெல்லிப்பழைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின் போது வீரச்சாவெய்திய-

**அன்சார்** (நிக்கலஸ் மைக்கல் குரூஸ் - பனங்கட்டிக் கொட்டு - மன்னார்)

**றோம்** (செல்லையா ஜெகநாதன்-நுணாவில் மத்தி, சாவகச்சேரி - யாழ்)

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தொண்டமானாற்றைச் சேர்ந்த இளைஞன்.

1987ஆம் ஆண்டு உரும்பராய்ப் பகுதியில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 02 பொது மக்கள்.

1989ஆம் ஆண்டு சுண்டிக்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**காண்டீபன்** (இராசலிங்கம் சிவபாலசுப்பிரமணியம்- சாவகச்சேரி - யாழ்)

இதே ஆண்டு கொலையுண்ட நாட்டுப்பற்றாளரான-

**கனகரத்தினம் ரவீந்திரன்** (விளாங்கொடை, தெல்லிப்பழை - யாழ்)

1990ஆம் ஆண்டு மட்டு ஏறாவூர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த தமிழிளைஞன்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**


(சி-7798)

# தலைவர் பிரபாகரனின் சிந்தனைகள்: ஒப்பற்ற வரலாற்றுக் களஞ்சியம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆரம்பித்து, அதன் போராட்ட வடிவமாக புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை அறிமுகப்படுத்தி, அந்த ஆயுதப் போரை ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக விரிவுபடுத்தி, அந்த விடுதலைப் போரைச் சிறப்பானமுறையில் திட்டமிட்டு வழிநடத்தி, அந்தப் போராட்டத்தில் ஒப்பற்ற சாதனைகளை நிலை நாட்டி, அந்த சாதனைகள் மூலம் தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை சர்வதேச அரங்கில் முதன்மைப்படுத்தி, இன்று உலகம் வியக்கும் ஒரு பெரும் தலைவனாகவும், சுதந்திர வீரனாகவும் புகழடைந்துள்ள எமது தேசத்தின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களது சிந்தனைத் தொகுப்பாக இந்த நூலை வெளியிடுவதில்பெருமையடைகிறோம்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒரு தசாப்த போராட்ட வரலாறு இந் நூலில் பொதிந்து கிடக்கிறது. இந்தக் கால கட்டத்தில் ஏற்பட்ட வரலாற்று நிகழ்வுகள், திருப்புமுனைகள், அரசியல் நெருக்கடிகள், யுத்த நடவடிக்கைகள், அரச பயங்கரவாதக் கொடுமைகள், என்பனவற்றிற்கு அவ்வப்போது தலைவர் அளித்த விளக்கங்களும் மதிப்பாய்வுகளும் இத் தொகுப்பில் உள்ளடங்கியுள்ளன. நீண்டதும், வீரம் செறிந்ததுமான போராட்ட வரலாற்றில் தனது சொந்த அனுபவங்களையும், வாழ்க்கைப் பின்னணியையும், தான் வரித்துக் கொண்ட இலட்சியங்களையும், தனது உலகப் பார்வையையும் மிகவும் தெளிவாகவும், துல்லியமாகவும் உலகப் பத்திரிகையாளருக்கு வழங்கிய பேட்டிகளில் தலைவர் விளக்கியிருக்கிறார். அரசியல் நிலவரங்கள், போராட்ட சூழ்நிலைகள் மட்டுமல்லாது கல்வி, பொருளாதாரம், கலை இலக்கியம், பெண்விடுதலை, நீதி நிர்வாகம் போன்ற பல்வேறு விடயங்களுக்கும் தலைவர் வழங்கியுள்ள கொள்கை விளக்கங்களும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. தலைவர் பிரபாகரனின் அரசியல் சிந்தனையையும் சமூகப் பார்வையையும் ஆழமாக அறிந்து கொள்ள விரும்புவர்களுக்கு இந்த நூல் ஓர் அரிய விருந்தாக அமையும்.

தமிழீழத்தில் தலைமறைவாக வாழ்ந்து ஆயுதப் போராட்டத்தை வழிநடத்திக் கொண்டிருந்த தலைவர், அவர்கள் 1983 இன் கடைசிப் பகுதியில் இந்திய மத்திய அரசின் அழைப்பை ஏற்று தமிழ்நாடு சென்று அங்கு தங்கியிருந்த போதே சர்வதேசப் பத்திரிகையாளரைச் சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. 1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவிலிருந்து வெளிவரும் 'சண்டே' என்ற பிரபல ஆங்கில வார ஏட்டின் செய்தியாளர் ஒருவரே முதன் முதலில் தலைவரைச் சந்தித்து அவருடன் ஒரு நேர் காணலைச் செய்திருந்தார். தலைவரின் இந்த முதலாவது பேட்டி இந்திய அரசியல் உலகில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியதுடன் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சர்வதேச அரங்கில் பிரபலப்படுத்தவும் ஏதுவாக அமைந்தது. தமிழ்நாட்டில் தங்கியிருந்த காலத்தில் இந்திய, உலகப் பத்திரிகைகளுக்கும், சஞ்சிகைகளுக்கும்தலைவர் வழங்கிய செவ்விகள் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக 1986ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம், 5-ம் திகதிகளில் இந்திய ஆங்கில தினசரியான 'இந்து' வில் வெளியான தலைவரின் பேட்டி மிகவும் பிரசித்தமானது. விடுதலைப் புலிகளின் போர்முறைத் திட்டம், அரசியல் கொள்கைத் திட்டம், சித்தாந்தம் பற்றியும் தனது வாழ்க்கைப் பின்னணி, ஆரம்பகால சிந்தனை வளர்ச்சி ஆகியன போன்றபல சுவாரஸ்யமான தகவல்களையும் தலைவர் இப்பேட்டியில் வெளியிட்டுள்ளார். இப்பேட்டி பல இந்தியப் பத்திரிகைகளிலும், உலக அரசியல் ஏடுகளிலும் மறுபிரசுரம் செய்யப்பட்டு புலிகள் இயக்கத்தை சர்வதேசமயப்படுத்த பெரிதும்உதவியது எனலாம்.




சிங்களப் பேரினவாதம் தமிழீழ மக்களுக்கு நீதி வழங்கப் போவதில்லை; சமாதான வழியில் பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு வழங்கப் போவதில்லை; இராணுவ அடக்குமுறை மூலம் தமிழரின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி தமிழினத்தை இனவாரியாக ஒழித்துக்கட்டவே சிங்கள ஆளும் வர்க்கம் முயற்சிக்கும் என்று அன்று தொட்டே தீர்க்க தரிசனப் பார்வையுடன் தலைவர் வலியுறுத்தி வந்த கருத்துக்கள் இன்றும் பொருத்தமுடையதாக இன்றைய அரசியல் — இராணுவ எதார்த்த நிலையைப் பிரதிபலிப்பதாக அமைந்திருப்பதைக் கண்டு கொள்ளலாம். தமிழீழத் தனியரசே தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இறுதியான தீர்வு என்பதைத் தலைவர் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் திரும்பத் திரும்ப, அன்று தொட்டு இன்றுவரை எடுத்துரைத்து வந்துள்ளதை அவரது பேட்டிகளிலிருந்தும் கொள்கைப் பிரகடனங்களிலிருந்தும் அறிந்துகொள்ளலாம்

கொண்ட கொள்கையில் தெளிவும், தளராத இலட்சிய உறுதியும், தீர்க்கதரிசனப் பார்வையும், முற்போக்கான சமூகவியல் கண்ணோட்டமும், ஆழமான மக்கள் நேயமும் தலைவரின் ஆளுமையை ஆட்கொண்டு நிற்கும் கருத்துலகமாக அமைந்திருப்பதை இந்தக் கருத்துத் தொகுப்பைபடிப்பவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

இதனை ஒரு வரலாற்று ஆவணமாகவும் கொள்ளலாம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வழி நடத்தும் தலைவரின் வாயிலாக இந்த வரலாறு சொல்லப்படுகிறது. புயலின் மையமாக நின்று தமிழரின் சுதந்திர இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் ஒரு வரலாற்று மனிதனின் சுயதரிசனப் பார்வையில் இந்தச் சரித்திரம் எழுதப்படுகிறது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆர்வமும், அக்கறையும் கொண்ட அனைவருக்கும் இது ஒரு ஒப்பற்ற வரலாற்றுக் களஞ்சியமாக விளங்கும்.

தலைமைச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்

(**''எனது மக்களின் விடுதலைக்காக''** என்ற இந்த நூலின்முன்னுரையில் இருந்து)

# இந்தியப் பிரதமர் மன்னிப்பு கோர வேண்டும்

இரண்டாவது உலகப்போரின் போது இதர ஆசிய நாடுகள் மீது ஜப்பான் ஆக்கிரமிப்புப் போர் நடத்தியது என்பதை இன்றைய ஜப்பானிய பிரதமர் ஒசோகாவா ஒப்புக்கொண்டிருக்கிறார். போர் முடிந்து கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகள் கழிந்த பின்பு இப்போதுதான் ஓர் ஜப்பானிய பிரதமர் ஜப்பானின் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். அதற்காக அவர் மன்னிப்பும் கோரியுள்ளார்.

போர் நடைபெற்ற நேரத்தில் ஜப்பான் என்ன சொன்னது தெரியுமா? வெள்ளை ஏகாதிபத்தியங்களிடமிருந்து ஆசிய மக்களை விடுதலை செய்வதற்காகவே போர் புரிவதாகச் சொல்லிக் கொண்டது. இப்படிச் சொல்லித்தான் சீனத்தின் மீது படையெடுத்தது. இந்தோ-சீன நாடுகள் மீது படையெடுத்தது. இந்தியாவின் வடக்கு வாசல வரை வந்து சென்றது. இரண்டாம் உலகப் போரில் ஜப்பானியப் படைகள் செய்த கொடுமைகள் கொஞ்சநஞ்சமல்ல. 1937 இல் நடைபெற்ற பாலியல் வன்முறைக் கொடுமை உலகை அதிரச் செய்தது. ஜப்பானிய இராணுவத்தினர் ஏராளமான சீனப் பெண்களைப் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாக்கி விட்டு கொடிய முறையில் அவர்களை வாளால் வெட்டிக் கொன்றனர். இந்த வரலாற்று நிகழ்வுகள் இன்று வரை ஜப்பானிய மாணவர்களுக்கு சொல்லப்படவில்லை. ஜப்பானியப் பிரதமர் குற்றத்தை ஒப்புக்கொண்டிருப்பதால் இனிமேல் அவை சொல்லப்படலாம், எதற்கு இந்த ஜப்பானிய புராணம் என்று கேக்கிறீர்கள் ?

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாடு பாடம் கற்றுக் கொள்ளலாம். ஒரு பிரதமரிடமிருந்து இன்னொரு பிரதமர் பாடம் பெறலாம்

இந்திய அரசு ஒப்பந்தம் என்றும், அமைதிப்படை என்றும் சொல்லிக் கொண்டு தமிழீழத்தின் மீது ஆக்கிரமிப்புப் போர் நடத்தியதை இந்திய அரசு இப்போதாவது ஒப்புக்கொள்ளலாம் இந்திய இராணுவம் தமிழீழத்தில் நடத்திய கொடுமைகளுக்காக இந்தியப் பிரதமரும் மன்னிப்புப் கேட்கலாம் தமிழீழம் மலரும்போது அது இந்திய நாட்டின் தெற்கு எல்லையில் ஒரு பகை நாடாக உருவாகுவதை இதன் மூலம் தவிர்க்க முடியும். இதில் கௌரவம் பார்க்கத் தேவையில்லை

ஒசோகாவோ செய்துவிட்டார்.

நரசிம்மராவ் செய்வாரா ?

இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளியாகும் 'நாற்காலி' எனும் சஞ்சிகை எழுதியுள்ளது.

# “எழும்பு என்று யாரும் சொல்லாது - குந்த ஒரு குடிநிலம் வேண்டுமே”

எதிர்பார்த்தது போலவே நிகழ்ந்து விட்டது. இவ்வருடம் மே மாதம் ஜேர்மனியில் 3 துருக்கிய பச்சிளம் பாலகரும், இரு துருக்கிய பெண்களும் தீமூட்டி எரிக்கப்பட்டு கொல்லப்பட்டபோது அடுத்து தமிழீழத் தமிழர் இவ்வன்முறைகட்கு பலியாக கூடுமோ என்கிற அச்சம் பரவலாக எழுந்தது. ஏனென்றால், மிக நீண்டகாலமாக மிகக் கூடிய தொகையினராக வாழும் துருக்கியருக்கே இக் கதி என்றால் தமிழரின் கதி என்னாகுமோ என்ற எண்ணம் தோன்றியது. இப்போது மண்டைதீவைச் சேர்ந்த ராசராசேசுவரலிங்கம் அவர் மனைவி, இரு பிள்ளைகள் வீட்டோடு எரியூட்டப்பட்டு கொல்லப்பட்டுவிட்டனர் என்றும் அதற்கு முன்னர் சுஜிதா புவனேசுவரன் என்கிற 13 வயதுச் சிறுமி கடத்தப்பட்டு கொலையானாள் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. இச் சம்பவங்கள் ஜேர்மனியில் மட்டுமன்றி அண்மைக் காலமாக ஐரோப்பிய நாடுகள் எங்கும் வளர்ந்து வரும் நவீன இனவாதப் போக்கின் தன்மையை விளக்கி நிற்கின்றன. இனிமேல் வெளிநாட்டவர் ஐரோப்பிய நாடுகளில் படப்போகும் துன்பங்கள், அடையப் போகும் அவலங்களைப் புலப்படுத்தியும் நிற்கின்றன. 35 வருடங்கட்கு மேலாக ஜேர்மனியில் உழைக்கும் துருக்கியர் மேல் நாளாந்தம் தொடுக்கப்படும் தாக்குதல்கள்; பிரித்தானியா, பிரான்சு போன்ற முன்னணி ஐரோப்பிய நாடுகளில் வெளிநாட்டவர் மேல் பரவி வரும் வெறுப்பு, கசப்பு, காழ்ப்புணர்ச்சிகள்; பரவி வரும் இனவாத வன்முறைகளை தடுப்பதற்குப் பதிலாக தத்தம் நாடுகட்கு வருவோரைத் தடுக்கும் வகையில் புதிய சட்டங்கள் இந்நாடுகளால் இயற்றப்படல் என்பனவே இன்றைய ஒழுங்காகி விட்டன.

இப்புதிய தோற்றப்பாட்டின் முழு பரிமாணத்தையும் ஜேர்மனியிலேயே நாம் தெளிவாகக்காண முடியும். இரண்டாம் உலகப் போரின் பின்னர் தண்டனையாகத் துண்டாடப்பட்ட ஜேர்மனியர் மத்தியில் தமது தேசியத்தன்மை சிதைக்கப்பட்டதாகத் தாம் மட்டுமே ஐரோப்பாவில் ஒரு நாடாக இருக்கும் தன்மையை இழந்ததாகக் கருதப்படும் மனநிலையை முன்னர் பயன்படுத்தி வெற்றி பெற முடியாத நவ நாசிக்குழுக்கள் இப்போது அதிகரித்த செல்வாக்கினைப் பெறத் தொடங்கியிருப்பதே அதிர்ச்சியூட்டும் நிலையாகின்றது. முன்னர் கிழக்குஜேர்மனியில்பொதுவுடமைக்கட்சி ஆட்சியில் இந் நாசிக் கருத்துக்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டன. அல்லது மறைக்கப்பட்டன. மேற்கிலோ அப்போது வளர்ந்து வந்த பொருளாதார செழிப்பை அனுபவித்த புதிய வருக்கம் இப் பழைய கனவுகளை மறக்க முயன்றது. ஆனால் இப்போது நிலை மாறிவிட்டது. கிழக்கும் மேற்கும் ஒன்றாகிவிட்டன. கிழக்கு ஜேர்மனியர் எதிர்பார்த்தது போல அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. செல்வச் செழிப்புள்ள வாழ்வு கிட்டவில்லை. இன்றும் 40வீதமான உழைக்கும் வருக்கத்தினர் வேலையற்று உள்ளனர். அது போலவே இன்று ஐரோப்பாவில் நிலவும் பொருளாதார மந்தம் ஜேர்மனியை முழுமையாக பாதிப்பதாய் நிகழ்கால பின்னடைவுகளை இறந்தகால கனவுகளைப் புதுப்பிப்பதன் மூலம் மாற்றீடு செய்யப்படும் முயற்சி செல்வாக்குப் பெறத் தொடங்குகிறது. எனவே ஜேர்மனிய வரலாற்றின் மாபெரும் கறையாக கருதப்படும் கிட்லரின் மூன்றாம் குடியரசுக்கட்டகாலம் (Third Reich 1933 - 45) இவர்கட்கு பொற்காலமாகிறது. அக்காலகட்ட சுவஸ்திகா சின்னம், கிட்லரின்கட்சியின் வெளிநாட்டவரே வெளியேறுங்கள் என்கிற யூதர் தொடர்பான கீதம், கிட்லர் பாணியிலான வணக்கமுறைஇவர்களால் வரிக்கப்பட்டது மட்டுமன்றி இழந்து போன போலந்து, ஆஸ்திரியாப் பகுதிகள் தொடர்பாகவும் கனவுகள் விரிகின்றன. இன்று இத்தகைய நவ நாசிகுழுக்கட்கு முழுமையாக ஜேர்மனியக் காவல் துறையினர் துணை நிற்பதும் இராணுவத்திற்குள்ளே இவர்கட்கு ஆதரவு பெருகி வருவதும் ஒன்றும் இரகசியமல்ல.

எனவே இப்போது இத்தகைய தோல் தலையர் எனப்படும் மொட்டையடித்த இந் நவ நாசிக் குழுக்கள் எப்போதும் குடிவெறியில் கையில் மோசமான ஆயுதங்களோடு குறிப்பாக துருக்கியர் மேல் தாக்குதல் தொடுப்பது இன்று நாளாந்த நிகழ்ச்சியாகி விட்டது. இன்று ஜேர்மனியின் மொத்த குடித் தொகையான 7 கோடி 70 இலட்சம் பேரில் 70 இலட்சம் பேர் வெளிநாட்டவராவர். இதிலும் 18 இலட்சம் பேர் துருக்கியராவர்.

கடந்த 3 வருடங்களில் மட்டும் மொத்தமாக 30 இலட்சம் வெளிநாட்டவர் ஜேர்மனியுள் புகுந்து விட்டனர். எனவே இப்போது முன் உரிமை என்றும் பொருளாதாரச் சுமையையும் காரணம் காட்டி ஜேர்மனி தன் நலத்தைப் பேண சட்டங்கள் இயற்றத் தொடங்கி விட்டது. தனது மொத்த உற்பத்தி 2 வீதத்தால் குறைந்து விட்டதாகவும் வேலையின்மை மேற்கில் 8 வீதமாக கிழக்கில் 14 வீதத்திற்கு மேலாக அதிகரிக்கின்றது என்றும் ஜேர்மனி அலறுகின்றது. ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இவ்வாறே கூறுகின்றன.

ஆனால், இங்கேயொரு மிகக் கசப்பான உண்மையொன்றுமறைந்திருக்கின்றது அது தான் இழிவான இனவாத நிறவேற்றுமையை பின்பற்றும் போக்கு. பொருளாதார சுமையே காரணம் என்றால் ஏன் வெள்ளை நிறத்தவர் அல்லாதோரே தாக்கப்படுகின்றனர் என்கிற கேள்வி எழுகின்றது. ஜேர்மனியிலோ பிருத்தானியாவிலோ, பிரான்சிலோ அல்லது வேறெங்கிலோ ஒரு குரோசியன் போலந்துக்காரன் கங்கேரியன் தாக்கப்படவேயில்லையே ஆனால் ஆசியர் அரபுக்கள் ஆபிரிக்க கரிபியன் பகுதியினரே தொடர்ந்தும் தாக்கப்படுகின்றனர்.

**பாலகுமாரன்**

இத்துருக்கியர் கதை வித்தியாசமானது 1950களின் பிற்பகுதியில் ஜேர்மனிக்கும், துருக்கிக்கும் ஏற்பட்ட உடன்பாடு ஒன்றின்படியே ‘விருந்தாளி தொழிலாளர்களாக’ இவர்கள் ஜேர்மனிசென்ற ஆரம்பத்தில் ஜேர்மனியில் மிக கடுமையான உடலுழைப்பு பணிகள் யாவற்றையும் - தெருக்கூட்டுவதிலிருந்து சுரங்கங்களில் நிலக்கரி தோண்டுவதுவரை- செய்தனர். இன்று ஒரு புதிய துருக்கிய இளம் தலைமுறை உருவாகி விட்ட நிலையில் இவர்கள் உயர் கல்வி கூட பெற உரிமையற்று வாழ்கின்றனர். மொத்த குடித்தொகையில் 3 வீதமாகஇருந்தபோதும் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 9 வீதத்தையும் வரிவருமானத்தில் 7 வீதத்தையும் அளிக்கும்இவர்கள் பங்கு எவ்வகையிலும் குறைத்து மதிப்பிட முடியாதது. ஆனால் இவை எல்லாம் இன்று கணக்கிலெடுக்கப்படவில்லை.

இத்தகைய மக்களை விட தனது ஜேர்மனிய இன வழித் தொடர்புள்ள ஐரோப்பியர்க்கே மிகமுன்னுரிமை கொடுக்க ஜேர்மனி விரும்புகின்றது. கடந்த 1 1/2 வருடமாக ஜேர்மனியில் 10 இலட்சம் ஐரோப்பிய அகதிகள் வந்து குவிந்துள்ளனர். இவர்கள் 2 இலட்சம் பேர் குரோசியர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கே இன்னொரு உண்மையும் சுட்டப்பட வேண்டும். அண்மைக் காலத்தில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சியின் பின் யூகோசிலேவியாவின் சீர்குலைவின் பின் ஜேர்மனி மிகக் கூடிய நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டது என்னவோ உண்மை தான். இவ்வாறான ஐரோப்பிய அகதிகளின் 79 வீதமானோரை ஜேர்மனியே தாங்கிக் கொண்டதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே இப்போது முகத்திரைகள் கிழிந்து விட்டன. ஜேர்மனியின் பெருமைக்குரிய 1949ஆம் ஆண்டு யாப்பில் மனிதத்தின் மேன்மையை உணர்த்தும் மனித உரிமைக்கான ஜேர்மனிய மக்களின் மதிப்பினை காட்டும் வரிகட்கு ஏற்ப ஜேர்மனிய அடிப்படை சட்ட விதிகள் 16-வது பிரிவு தஞ்சம் கோருவதற்கான தனி நபர் உரிமை காக்கப்படும் எனக் கூறியது. ஆனால் 1993 மே மாதம் வரைதான் இவ் உரிமை பேணப்பட்டது. இப்பொழுது பெருத்தஆதரவோடு நிறைவேற்றப்பட்ட சட்டமாற்றம் அடைக்கலம் கோருவோரை திருப்பி அனுப்பும் உரிமையை அரசுக்கு வழங்கி விட்டது. முன்னர் ஜேர்மனிய எல்லைகளை களவாகக் கடக்கும் எவரும் தஞ்சம் அடைக்கலம் என்கிற வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலம் தமது வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படும் வரை ஜேர்மனியில் தங்கியிருக்க முடிந்தது. இனி அது முடியாது எனவே 16-ம் பிரிவிற்கான மாற்றம் ஜேர்மனிய நவநாசிகளின் வெற்றியாகிவிட்டது. இதனால் தாக்குதல்கள் அதிகரிக்குமேயன்றி குறையப் போவதில்லை. தேர்தல், பதவி போன்றவற்றையே கவனம் செலுத்தும் ஜேர்மனிய அரசு இரு நாசிக்குழுக்களை மட்டுமே தடை செய்தது. தடையும் பெருத்த பயனளிக்கவில்லை. ஏனென்றால் நாசிகளின் கருத்தையே மறைமுகமாக பிரதிபலிக்கும் குடியரசுக் கட்சியின் உதவி 1994 தேர்தல் தனக்குத் தேவைப்படும் என ஜேர்மனிய அதிபர் கோல் கருதுவது வெளிப்படையானது.

இது ஜேர்மனியருக்குரிய கதை மட்டுமல்ல பிரான்சிலும் இதே நிலை. ஒப்பீட்டளவில் பார்க்குமிடத்து பிரான்ஸ் வெளிநாட்டவர்களிற்கு கூடிய பாதுகாப்பானபகுதியாக இது வரை காலமும்கருதப்பட்டது. ஆனால் தற்போது பதவிக்கு வந்துள்ள புதிய கூட்டணி அரசு அதற்கும் முற்றுப்புள்ளி வைக்கப் போகின்றது. ஏனெனில் இக் கட்சியின் வெற்றிக்கு வெளிநாட்டவரை கட்டுப்படுத்துவோம் என்கிற கோசம் பெரிதும் காரணமாக இருந்தது. இப்போது பிரெஞ்சுத்தேசியவாதம் என்பது இன அடிப்படையில்தெளிவாக மீள் வரையறுக்கப் படவேண்டும் என்கிற கோரிக்கைவலுப்பெறுகின்றது. எனவே இப்போது வெளிநாட்டு தம்பதியினர்க்கு பிரான்சில் பிறக்கும் பிள்ளைகள்பிரெஞ்சுக்குடியுரிமைபெறுவதை கட்டுப்படுத்தும் சட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. பிரான்சியரும் குடிபுகுவோர் விடயத்தில் கவலைப்படுவது இனவாதம் பேசும் தேசியமுன்னணிக்கு 12.5 வீத வாக்குகளை அவர்கள் அளித்ததன் மூலம் வெளிப்படுத்தி விட்டனர். இக்கட்சியின் தலைவரான லீபென்னின் (Jean marle Le Pen) இனவெறிப் பேச்சுக்களின் காரம் தாங்க முடியாதவை. இப்போது சிராக் போன்ற பிரெஞ்சுத் தலைவர்களே வெளிநாட்டவர் தொல்லை குறித்து மட்டுமன்றி அவர்கள் சத்தம் மணம் பற்றியும் இழிவாகப் பேசுகின்றனர். இப்புதிய அரசின் ஆட்சியில் காவல்துறை கண்காணிப்பிலிருந்த 4 கறுப்பு இன வாலிபர்கள் கொல்லப்பட்டது எதிர்காலத்திற்கு ஓர் முன்னோடி சம்பவமாகி விட்டது. எனவே இப்போது பிரான்சின் உயர் விழுமியங்களாக கூறப்படும், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம்என்பனபுதைகுழிக்குள் போய்விட்டதாக ஆய்வாளர்ஒருவர் கூறுகிறார்.

இவை எல்லாவற்றையும் விட மிகவேறுபட்ட நிலையை நாம் பிரித்தானியாவில் காணலாம். அங்குள்ள சமூக நிலையை உற்றுநோக்குவோர் மிக அதிர்ச்சியடைவர். இரு வேறுபட்ட சமூகங்கள் அங்கு உள்ளன அங்கு கறுப்பின சமூகம் தனித்தும், தாழ்வடைந்தும் வெள்ளையர் சமூகத்திலிருந்து தனியாக இருப்பதை காணலாம். ஜேர்மனியைப் போலல்லாது பிரித்தானியாவில் உள்ள பெரும்பான்மை வெளிநாட்டவர் முன்னாள் பிருத்தானிய ஏகாதிபத்தியத்தின் - இன்னாள் பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்தவர்கள். இதனால் வாக்களிப்பது உட்பட சகல அரசியல் உரிமைகட்கும் உரித்துடையவர் பிரசா உரிமையை உடையவர் ஆனால், உண்மை நிலைவேறு இத்தகைய மக்களைத் தம்மோடு சமமாக ஒன்றாகக் கருத பிரித்தானிய சமூகஅமைப்பு இடம்கொடுக்கவில்லை. பிரித்தானிய சமூகம் மரபுவாத உயர்குடி தன்மைகளை இறுக்கமாக பின்பற்றும் சமூகம் ஏற்றத்தாழ்வுகள் தாபனமயப்படுத்தப்பட்டுள்ளன. எனவே இன்று வெள்ளை இன அயலவரால் அவர்களது அதே உரிமைகள் உள்ள ஆசிய, ஆபிரிக்க கரிபியன் நாட்டவர் அவமானப்படுத்தப்படுவது, தாக்கப்படுவது நாளாந்த நிகழ்வாகி விட்டது. இவர்கள் இழிந்தவர் என்கிற எண்ணம் அங்கு சமூகப் பண்பாக உள்ளது. காவல்துறை பாரபட்சமாகவே நடக்கின்றது. சமீபத்தைய நீதிமன்றத் தீர்ப்புகள் வெளிநாட்டவரைக் கடுமையாகப் பாதிக்கின்றன. எனவே இங்கும் இழிவுபடுத்தப்படுவதே எம் மக்கட்கான அடையாளமாகி விட்டது.

இவற்றினை எல்லாம் பார்க்குமிடத்து ஒரு விடயம் மட்டும் மிகத்தெளிவாகின்றது. சரியோ பிழையோ-ஐரோப்பிய நாட்டவர் தமது நல்வாழ்விற்காகமட்டுமே - தமது இருப்பை உறுதிப்படுத்த மட்டுமே விரும்பி செயற்படுவது தெளிவாகின்றது. இத்தகைய நிலையில் எம்மவர் - அங்கு சென்றவர் என்ன செய்யப் போகிறார்கள்? தமது உரிமைக்காக அங்கு போராடப் போகிறார்களா அல்லது வேறெவராவது தமக்காகவும் சேர்ந்து போராடுவார்கள் என எண்ணி இருக்கப் போகிறார்களா? ஏனிந்த சிக்கல் இவர்கட்கு குந்த ஒரு குடிநிலம் வேண்டும் என இவர்கள் என்று உணர்வார்கள்? [‘‘நிலம்வேண்டுமே நிலம் - எனக்கு, உனக்கு, அவனுக்கு - நம் எல்லோர்க்கும் நிலம்-தாய்நிலம்.’’]

(கருணாகரன் கவிதை)

## வா போராடு

தமிழீழ மைந்தனே,
தூங்கி வழியும் காலமல்ல...
துள்ளி எழும் காலமடா
தள்ளி நின்று பார்த்து
எலியாகிப் போவதற்கு
தாய் உன்னைப் பெறவில்லை
புலியாக வா, போராடு.

கரப்பான் பூச்சியல்ல — நீ
வளைகளுக்குள் ஒளிப்பதற்கு
தமிழீழம் அழைக்கிறது
வா, போராடு.

பொக்கை வாய் கிழவர்களும்
புலியாகி, துணைப்படையாகி
எதிரி படை விரட்டுகையில்
தாமதமேன் வா, போராடு

விடியலை வருவிக்க
சேவல்கள் மட்டுமல்ல,,.
கோழிகளும் கூவுகையில்..
வீட்டில் என்ன விருந்துண்ணல்
விரைந்து வா, போராடு

**சி.பாவரசன்**

யாழ்ப்பாணம்

சிறுகதை

# புதிய உதயம்

பொன். பாலகுமார்

நீண்ட வரட்சிக்குப் பின் கடந்த மூன்று நாட்களாய்க் கொட்டித் தீர்த்த மழை மீண்டும் அடங்கிக் கொண்டது. கறுத்த கம்பளியால் மூன்று நாட்களும் தன்னை இழுத்துப்போர்த்திய வானத்திலிருந்து ஒரு நிலவு மெல்ல எட்டிப்பார்க்கிறது. இரவிரவாய்க் கண் விழித்துக் கிடந்த வெள்ளிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் சினுங்கிக் கொண்டிருந்தன. சிவன்கோவில் காண்டாமணியின் ஓசை அதிகாலை நான்குமணி என்பதை அக்கிராம மக்களிற்கு அறிவித்துக்கொண்டிருக்கிறது.

'சிவ...... சிவா......' என்ற பெரும் குரலோடு சோம்பல் முறித்த சின்னத்தம்பியர் கிராமியத்திற்கே உரித்தான கொட்டாவியுடன் மெல்ல எழுந்து திண்ணைக் குந்தில் சாய்ந்து கொள்கிறார்.

இதமாக வீசும் மெல்லியதான குளிர்காற்றுமாரிகாலத்தின் உதயத்திற்கு கட்டியம் கூறிக் கொண்டிருக்கிறது. தலைமாட்டில் கையை வைத்துக் குடைந்து நெருப்புப் பெட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு கூரை இடுக்கில் செருகி வைத்த குறைச் சுருட்டை மெல்ல இழுத்தெடுத்து வாயில் வைத்து நெருப்பைப் பற்ற வைத்துக் கொள்கிறார். தொடர்ச்சியாய்அவர் வாயிலிருக்கும் சுருட்டிலிருந்து புகை கக்கத் தொடங்கியது.

மாட்டுக் கொட்டிலின் ஒரு மூலையில் கட்டித் தொங்க விடப்பட்டுத் தவம் கிடக்கும் கலப்பை அந்த மங்கிய நிலவொளியில் அவர் பார்வையில் பதிந்து கிடக்கிறது.

பாளம், பாளமாய் சிதறி வெடிச்சுக்கிடந்த மண் ஈரமாகிப் பதமாய்க் கிடக்கும் ...... எப்பிடியும் நாளையிண்டைக் கிடையிலை உழுதுபோட வேணும் ... ... சின்னத்தம்பியர் மனதிற்குள் நினைத்துக் கொண்டார். மின்னலொன்று தோன்றி மறையும் கணப்பொழுதில்அவர்முகம்இருண்டு சுருங்கிக் கொண்டது ஒரு கிழமைக்கு முன் ... ...

'சின்னத்தம்பி ... ... பத்தோடை பதினொண்டா உன்னட்டை வந்திட்டன் மாரிக்குத் தறை செய்யிற தெண்டா குத்தகைக் காசைக் கொண்டந்து தந்திட்டு தோட்டத்துக்கை காலை வை ...' கொழுத்தும் வெய்யிலில் சுடுதண்ணியாய் சிங்கப்பூர் மணியத்தார் கொதித்துக் கொண்டிருந்தார்.

இப்ப ஆறுமாதமாய் உதைத்தான் சொல்லிக்கொண்டு வாறாய் ... ... மூன்று வரியமாய் தறை தரயில்லை. கடைசிமுறையா சொல்லுகிறன் மாரிக்குத்தறை செய்யிற தெண்டா குத்தகைக் காசைக் கொண்டு வந்து தந்திட்டுத் தறையுக்கைஇறங்கு... இல்லாட்டித் தறையை விடு' வெட்டொன்று துண்டு இரண்டாய் மணியத்தார் சொல்லியபடியே மூர்க்கத்தனமாய் படலையை இழுத்துச்சாத்திக் கொண்டு வெளியேறினார்.

அந்த அதிகாலைப் பொழுதில் அவலக்குரல் எழுப்பிப் பறக்கும் ஒற்றைக் குருவியொன்றின் சோககீதம் சின்னத்தம்பியரை நிஜ உலகிற்கு அழைத்துவர அவரதுபார்வை மீண்டும் கலப்பையில் குத்தி நிற்கிறது.

பொழுது மெல்லப் புலரத் தொடங்கியது ... ... ... கந்தசாமி அறுத்துக் கட்டிய வெங்காயச் சாக்கை சிரமத்துடன் சைக்கிளில் ஏற்றிக் கட்டி சந்தைக்குப் போகத் தயாராகிக் கொண்டிருக்கிறான்.

'கந்தசாமி...... இந்தாணை தேத்தண்ணி' அடுப்படியிலிருந்து தேத்தண்ணியை கொண்டுவந்து திண்ணையில் வைத்துவிட்டு இன்னொரு கோப்பையைசின்னத்தம்பியருக்கருகில்வைக்கிறாள்அன்னம். கந்தசாமி திண்ணையில் குந்தியவாறே தேத்தண்ணியை குடித்துக்கொண்டிருக்கிறான். மெல்லிய குளிர் காற்றுத் தாலாட்டுப்பாட அமைதி அங்கு விரிந்துகிடக்கிறது.

'கந்தசாமி ... ...'

'என்னையா'

'சந்தையாலமினக்கெடாமல் வா. உழவுக்கும் ஆயுத்தப்படுத்த வேணும். அதோடை பொலிகண்டிக்கு மொருக்காப் போகவேணும் ' குறைச் சுருட்டை வெளியே எடுத்து உமிழைத் துப்பிக் கொண்டே சொன்னார் சின்னத்தம்பி '... ... ... ... ...'

'நான் சொல்லுறது கேக்குதே ..' சின்னத்தம்பியரின் வார்த்தைகளில் சினம் தொனித்தது.

'பொலிகண்டிக்கேன்...'

'பொயிலை நாத்துக்கு அச்சவாரம் குடுக்க'

'இல்லையும் ... ... இந்தப் பொயிலைப்பாடத்தைப் பாருமன் நானென்ன காசை வைச்சுக் கொண்டே இல்லை எண்ணுறன் முந்தநாளும் கோண்டாவிலில் இருந்து தரகன் வந்திட்டுப் போனவன் கீரை விலை கேக்கிறான் எவ்வளவு கஷ்டப்பட்டு கெட்டெடுத்து வளத்து வெட்டி உணத்தி... என்னண்டும் குடுக்க மனம் வரும். ... ...'

'உணத்தின பொயிலை வருசக் கணக்காய் அப்பிடியே கிடந்து கருகுது. அதை கேக்கிறவிலைக்கெண்டாலும் குடுத்துத் துலைச்சால் கடனுகளையாதல் குடுக்கலாம். மணியத்தார் குத்தகைக்காசு தராமல் தறையுக்கை கால் வைக்கப்படாதெண்டிட்டார். இதுகளைச் சரிசெய்ய வக்கில்லை... உழவும்.. நாத்தும்...' சுட்டெரிக்கும் கந்தசாமியின் சொற்கள் ஏ.கேயிலிருந்து கிளம்பும் றவுண்டசுகளாய் சின்னத்தம்பியரின்இதயத்தைச் சல்லடையாக்குகின்றன.

'டேய்... டே கந்தசாமி விடியக் காலத் தாலை உனக்கென்னடா வந்திட்டுது' அன்னம் பதைபதைக்க கத்திய படியே அடுப்படியை விட்டு வெளியே வந்தாள்.

பின்னை என்னணை ஒவ்வரு வரியமும் பொயிலை... வெங்காயம்... பொயிலை... வெங்காயம் கடைசியாய் கண்ட மிச்சம் கடனும் தனியுந்தான்' அமைதியாய் நியாயத்தைச் சொன்னான் கந்தசாமி.

'பின்னை நீ கொய்யாவை இப்ப என்ன செய்யச் சொல்லுறாய்'

'எணை சூழ் எண்டாலும் ஒரு நேரம் நின்மதியாய் குடிச்சு கடன் தனியில்லாமல் கிடக்கவேணும். வரியா வரியம் எங்கடை கடன் கூடுதேயொழிய குறையவில்லை...'

''டேய் வேறை என்னத்தையடா செய்யச் சொல்லுறாய்... வாய் காட்டப்பழகியிட்டியள்...''

''வாய் காட்டயில்லையையா... இப்பத்தையில் சூழ் நிலையில வெங்காயம், பொயிலை வைச்சு லாபம் எடுக்கேலாது. இப்போதைக்கு நாங்கள் சாப்பிடக் கூடிய பயிரைச் செய்து கடனில்லாமல் நின்மதியாய் வாழ்ந்தால் அதே போதும்...'

'கடன்... கடன்... நானென்ன இலட்சக் கணக்கிலையே கடன்பட்டனான் அல்லா கடன்பட்டு குடிச்சுவெறிச்சனானே. கடன்பட்டு உங்களைத்தான்ரா படிப்பிச்சு, வளத்து ஆளாக்கினனான். அறப்படிச்சவன் கூழ்பானையுக்கை விழுந்த மாதிரிதான் கதையள்...' ஆத்திரம் பீறிட உருக்கொண்டவராய் உடலெல்லாம் பதை பதைத்து நடுங்க எழுந்தார் சின்னத்தம்பி.

கந்தசாமி நிதானமாக எழுந்து நின்றான். அவன் பார்வை தெளிவாயிருந்தது உறுதியோடு சின்னத்தம்பியரைப் பார்த்தான். அனல் கக்கும் சின்னத்தம்பியரின் பார்வையால் உறுதியான கந்தசாமியின பார்வையைச் சந்திக்கமுடியவில்லை.

'ஐயா... உங்களை ஆரும் வெங்காயம். பொயிலை செய்ய வேண்டாமெண்டு சொல்லிச் சொல்லயில்லை. கூடுதலான முதலைப்போட்டு கஷ்டப்பட்டுஉண்டாக்கி அரைவிலை காவிலைக்குத்தான் விக்கவேண்டிக் கிடக்கு. தலைமுறை தலை முறையா 'எங்கடை மண்ணில் விளையிற பயிரை அப்பிடியே கொழும்புச் சந்தைக்கு அனுப்பிப் பழகியிட்டம். அண்டைக்கே நாங்கள் விளையுற பயிரிலை இருந்து சாப்பாடோடை தொடர்பான வேறை சாமான்களை செய்யக் கண்டு பிடிச்சிருந்தால் இந்தச் சூழ் நிலையீலை அரைவிலை காவிலைக்கு விக்கவேண்டிவராது. இண்டைய நிலையிலை எல்லாரும் வெங்காயத்தையும், பொயிலையையும் செய்தா ஆனவிலைக்கு விக்க சந்தை எங்கே கிடக்கு? இதாலை எப்பிடி அக்கறையாச் செய்தாலும் நட்டப்பட்டே தீரவேணும். இதாலை மிஞ்சிறது கடன்தான்' அமைதியாக கந்தசாமி சொன்னான்.

'அவன் தம்பி சொல்லுறதும் சரிதானேயணை மூண்டாம் வரியத்திலையிருந்து ஆனவிலைக்கே வெங்காயம் பொயிலை வித்தனாங்கள்...' கந்தசாமியை ஆமோதித்தான் அன்னம்.

சின்னத்தம்பியரின் வாயிலுள்ள குறைச்சுருட்டிலிருந்து புகை தொடர்ந்தது. முகம் இருண்டு கறுத்தது. மீண்டும் மின்னலொன்று தோன்றி மறையும் கணநேரமௌனம்...

'அப்ப இப்ப என்னை என்ன செய்யச் சொல்லி சொல்லுறியள்' தனிமரமாய்த் தழுதழுத்த குரலில் கேட்டார் சின்னத்தம்பியர். அவர் கண்கள் பனித்தன.

'ஐயா நீங்கள் இந்தப் பொயிலைப் பாடத்தைகேக்கிற விலைக்கு முதல் குடுத்திட்டு அடைவை மீண்டு சின்னாச்சிக் குஞ்சின்ரை சங்கிலியை குடுங்கோ. நிலமை சீராகுமட்டும் எங்கடை சாப்பாட்டுத் தேவைக்கு குரக்கனையும். பயறையும், கௌபீயையும் செய்வம் கொஞ்சம் மரக்கறியும் போடலாம். விளையுறதை நாங்கள் சாப்பிடுவம் மிஞ்சுறதை விப்பம். நான் ஐக்கிய நாணய சங்கத்திலை மிகக்குறைஞ்ச வட்டிக்கு கடனெடுத்து மணியத்தாற்ற குத்தகைக் காசைச் சுழட்டி எறியிறன். உற்பத்திக் குழுவாலை மண்ணெண்ணை, உரம், விதை எடுக்கலாம்...... கொஞ்ச நாளைக்கு நீங்கள் ஓய்வெடுங்கோ ...' என்றவாறே கந்தசாமியின் சைக்கிள் நிதானமாக சந்தைக்கு செல்கிறது. அன்றைய பொழுது புதிய உதயத்துடன் புலர்ந்து கிடந்தது.

# திராவிடக் கட்சியில் மீண்டுமொரு பிளவு, தவிர்க்க முடியா கட்டம் நெருங்கிவிட்டது

இளையவன்

'ஒரே உறையில் இரண்டு போர் வாள்கள் இருக்க முடியாது' இது அண்மையில் தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி உதிர்த்த ஒரு கருத்தாகும். கருணாநிதி தனது போர் வாள்களில் ஒன்று எனப் பகிரங்கமாக பிரகடனம் செய்திருந்த வை. கோபால்சாமியை கட்சியிலிருந்து நீக்குவதற்கு எடுத்த முயற்சிக்கு தி. மு. கவின் மாவட்டச் செயலாளர்கள் ஒன்பது பேர் எதிர்ப்பு தெரிவித்த போது கருணாநிதி இவ்விதம் தெரிவித்திருக்கிறார். எனவே வை. கோவை கட்சியிலிருந்து தூக்கி எறிவது என்று மு. கருணாநிதி திட்டவட்டமாக முடிவு எடுத்து விட்டார் என்றே கூறலாம்.

ஆக தி. மு.க. மீண்டுமொரு பிளவை நோக்கி முன்னேறுகின்றது என்பதில் இனியும் ஐயப்பட ஏதுமில்லை. நீதிக் கட்சியிலிருந்து வெளியேறிய ஈ. வே. ராமசாமிப்பெரியார், பேரறிஞர் சி. என். அண்ணாதுரை போன்றோரால் திராவிடர் கழகம் நிறுவப்பட்டது. பிரித்தானிய ஆட்சிக்கு இந்தியா உட்பட்டிருந்த சமயத்தில் திராவிட நாட்டுக்கு டொமினியன் அந்தஸ்து கோரி இந்த இயக்கம் சேலம் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியது.இன,மான உணர்வுகளைத் தட்டி எழுப்புவதில் தீவிரமாக செயற்பட்ட இவ் இயக்கத்தின் முதலாவது பிளவு 1947இல் ஏற்பட்டது. சி. என். அண்ணாதுரையும் அவரது சகாக்களும் திராவிட கழகத்திலிருந்து வெளியேறி திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவினர். தந்தை பெரியாரின் மீது தொடர்ந்தும் புகழ்மாலைகளைச் சூட்டிய அதே சமயத்தில் ஆட்சிக் கட்டிலில் அமர்வதற்காக பெரியாரின் கொள்கைகளையும், கருத்துக்களையும் மிகவும் நாசூக்காக அண்ணாதுரையும் அவரது குழுவினரும் புறக்கணித்து வந்தனர். திராவிட நாடு கோரிக்கை வலுவிழந்து போக அடுக்குமொழிகளாலும், சுவர்ச்சிகரமான பேச்சுகளாலும் தமிழக மக்களை மயக்கிய தி. மு. க. 1962இல் மற்றுமொரு பிளவை சந்தித்தது. ஈ. வி. கே. சம்பத், கண்ணதாசன், சிவாஜிகணேசன் உட்பட பலர் அப்போது கட்சியை விட்டு வெளியேறினர். இந்த வெளியேற்றத்தைத் தொடர்ந்து தான் 'முரசொலி' பத்திரிகையின் நிறுவுனரான மு. கருணாநிதி தி- மு- கவில் முக்கிய இடத்தைப் பெற்றார். 1968இல் காங்கிரசைத் தோற்கடித்து சென்னை மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அண்ணாதுரை தலைமையிலான தி- மு- க- 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றி மகிழ்ந்தது. சில ஆண்டுகளில் அண்ணாதுரை இயற்கை எய்திவிட மு. கருணாநிதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையையும், தமிழ்நாடு மாநிலத்தின் முதலமைச்சர் பதவியையும் பொறுப்பேற்றார்.

கருணாநிதியின் ஆட்சி இரண்டு ஆண்டு கூட நீடிக்காத நிலையில் கழகப் பொருளாளரான எம். ஜி. இராமச்சந்திரனுக்கும் அவருக்கும் இடையிலான கருத்து முரண்பாடு மோதலாக வெடித்தது. கருணாநிதியின் ஆட்சியில் ஊழல் கொடிகட்டிப்பறப்பதாக குற்றம் சாட்டிய எம். ஜி. இராமச்சந்திரன் கணக்குக் கேட்கப்போக கட்சி பிளவுபட்டது, அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் பிறந்தது. திண்டுக்கல் தொகுதி இடைத் தேர்தலில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து எம். ஜி. இராமச்சந்திரன் உயிருடன் இருக்கும் வரையில் தோற்கடிக்கப்பட முடியாத மாபெரும் சக்தியாக அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக்கழகம் வளர்ச்சி கண்டிருந்தது.

எனினும் எம். ஜி. இராமச்சந்திரனின் மறைவைத் தொடர்ந்து அவரது கட்சி ஜெயலலிதா அணி என்றும் ஜானகி அணி என்றும் பிளவுபட்டிருந்தநிலையில்காங்கிரஸ் கட்சியும் தனித்துப் போட்டியிட்ட நிலையில் கருணாநிதியும் தி. மு. கவும் மீண்டும் தமிழ் நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றனர். ஏறத்தாள பதினைந்து வருட காலம் எதிர்க்கட்சியாக இருந்த போதும் கட்சியின் கட்டுக்கோப்பை கட்டி வளர்த்தமையே கழகத்தின் வெற்றிக்கு காரணமாக இருந்ததாக அப்போது கருணாநிதி புகழப்பட்டார் அவரது விடாமுயற்சியும் சலிக்கார்த உழைப்பும் மீண்டும் வெற்றிக்கனியைப் பெற்றுத்

(6ஆம் பக்கம் பார்க்க)

# திராவிட

தந்ததாக புகழ்மாலைகள் சூட்டப்பட்டார். எனினும் சந்திரசேகர் அரசினால் பதவி நீக்கம் செய்யப்பட்டதைய டுத்து உதய சூரியன் மீண்டும் அந்தி வானத்தில் விழுந்தது. இப்போது மீண்டும் ஒரு பிளவை நோக்கி முன்னேறு கின்றது.

தி.மு.க. வை பிளவுபடுத்த மத்திய அரசின் உளவு நிறுவனமான றோ(Raw)முயற்சிகள் மேற்கொள்வதாக மதுரையில் பத்திரிகையாளர்கள் மத்தியில் பகிரங்கமாக குற்றம் சாட்டிய மு. கருணாநிதி இரு வாரங்கள் கழிவதற்கு இடையில் உளவுத் துறை கொடுத்த தகவலை எப்படி முழுமையாக நம்பினார் என்பது தான் இன்றைய சிக்கலின் உச்சக் கட்டம் தி.மு.க விலிருந்து எம். ஜி. இராமச்சந்திரன் வெளியேறும் சூழலை உருவாக்கியதில் மத்திய அரசின் உளவுத் துறைக்கு முக்கிய பங்குண்டு என்று அநுபவ பூர்வமாகக் கண்டறிந்த கருணாநிதி ஏன் இப்போதும் உளவுத்துறையின் ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவலை எப்படி ஏற்றுக்கொண்டார் என்பது புரியாத புதிர்.

கருணாநிதியைக் கொலை செய்யும் திட்டத்திற்கு வை. கோபால்சாமி உடந்தை என்று 'றோ' கூறியிருந்தால் கூட ''என்தம்பி கோபால்சாமியால் எனக்கு ஆபத்து நேராது'' என்று கருணாநிதி ஏன் உறுதியாகக்கூறியிருக்கக் கூடாது என்பதுவே வை. கோபால்சாமியின் ஆதங்கம். ''கருவின் குற்றம்'' கவிதை எழுதியமைக்காக கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவி உட்பட அனைத்து பதவிகளிலுமிருந்து தூக்கி எறியப்பட்ட முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரனை மீண்டும் இணைக்கச் சொல்லி பகிரங்கமாக பிரசாரம் செய்தார் என்றும்ராணிப்பேட்டை தேர்தல் பிரசாரத்தின்போது தமது 'வான்' தாக்கப்பட்டபின்னர் துக்கம் விசாரிக்க வரவில்லை என்றும் புகார்கள் கூறுவது கருணாநிதியின் ஆளுமைக்கு அழகாக இல்லை என்பது வை. கோ. வின் எண்ணம்.

கட்சியில் குடும்ப ஆதிக்கத்திற்கு எதிராக போராடுவதாகவே வை. கோபாலசாமி தன்னை வெளிப்படுத்துகின்றார். ஜனநாயக அரசியல் என்று பெரிதாக பீற்றிக் கொள்ளப்படும்போதும், தென்னாசிய அரசியலில் அதுவும்குறிப்பாகஇந்திய அரசியலில் குடும்பச் செல்வாக்குஎன்பதுமுக்கியமானதொரு காரணியாகவே இருக்கின்றது. அந்நியராதிக்கத்திலிருந்து விடுபட முனைந்ததிலும், காங்கிரஸ் ஆட்சிக்கு முடிவுகட்டுவதிலும், பிராந்தியக் கட்சியின் ஆட்சிக்கு இடமளிப்பதிலும் இந்தியா முழுவதிலும் தமிழ்நாடு முன்னணியில் திகழ்ந்துள்ளது. குடும்பச் செல்வாக்கிற்கு முட்டுக் கட்டை போடும் விடயத்திலும் தமிழ்நாடு முன்னணி வகிக்குமா என்ற கேள்விக்கு வை. கோபால்சாமியின் அரசியல் எதிர்காலம் முடிவுசொல்லும் எனலாம்.

இதேவேளை தி.மு.கவின் தலைமை அலுவலகமான சென்னையில், அண்ணா சாலையிலுள்ள அண்ணா அறிவாலயநிர்வாகத்தை கோபால்சாமிக்கு நெருக்கமான வட்டாரங்கள் கைப்பற்றக் கூடும் என்றும் ஊகங்கள் தெரிவிக்கப்படுகிறது. அப்படி ஒரு பிரச்சினை வந்தால் அந்த அலுவலகத்தை'சீல்'வைத்துப் பூட்டிவிட்டு நீதிமன்றத்தில் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளுமாறு சொல்வதற்கு தமிழக அரசு தயாராக இருக்கிறது. அதாவது தி.மு.க. ஆட்சியின் போது அ.இ.அ.தி.மு.க. அலுவலகத்தை மூடி 'சீல்'வைத்த விடயத்தை ஜெயலலிதாஇன்னமும் மறக்கவில்லை. அவர் அதை மறந்து விடவும் போவதில்லையாம்.

★


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 1994

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள்|உற்பத்தியாளர்கள்|ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1993 டிசம்பர் 15-ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### வழங்கல்கள்:

01. எழுதுபொருள்கள்
02. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03. அலுவலக தளபாடம் மரம்
04. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல்அலுமாரி, கபினேட்டுகள் முதலியன)
05. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதிபண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன
06. சகலவகை ஹார்ட்வெயார் பெயின்டுகள், வார்னிஷ்
07. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
08. மின்சார சாதனமும் உதிரிப்பாகங்களும்
09. வெட்டும் கருவிகள், மண்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப் பொருட்களும் கண்ணாடிப் பொருட்களும்
12. மரம்
13. கட்டடப்பொருட்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன
15 டயர்கள், டியூப்புகள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகளும்
17. ஆயுர்வேத மருந்துகள்
18. மருந்துகளும் மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரிப் பொருட்கள்
20. தீயணைப்பு சாதனங்களும் பாதுகாப்புச் சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துகள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன
22. பைப்புகளும் பைப் இணைப்புக்களும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மண்பாண்டப் பொருட்கள் கண்ணாடிப்பொருட்கள் கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புக்கள்

### சேவைகள்:

01. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
02. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்
03. குளிர்சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள், திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்
04. ஸ்டீல் தளபாடங்களின் திருத்தவேலைகள்
05. மரத்தளபாடங்களுக்கான திருத்தவேலைகள்
06. கதிரைகள் பின்னல்
07. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகள் தைத்தல்
08. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
09. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் ''பைண்டிங்'' செய்தல்

### எந்திரவியல் சேவைகள்:

01. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
02. மின்மோட்டார்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
03. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டடங்கள் நிர்மாணித்தலும் திருத்த வேலைகளும்)
04. மின்சார வயறிங் வேலைகள்
05. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள்|திருத்த வேலைகள்
06. இரும்பு கிறில்கள்|கேற்றுகள் உருவமைத்தல்|பொருத்துதல்
07. கட்டடங்கள்|கட்டட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
08. நிலையாகப் பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல்/பொருத்துதல்

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''வழங்கல்கள்|சேவைகள் - 1994'' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என் முகவரியிடப்பட வேண்டும்
2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல்|சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 150 - பெறுமதியான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்குப் பெறப்பட்ட காசுக்கட்டளை/தபாற்கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்தும்| விலை மனுக்களைக் கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும்பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்களை சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்|சேவைகள் வழங்கும் எந்தவொரு வழங்குனரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப்புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
02. பெயரும் விலாசமும்
03. தொலைபேசி இலக்கம்
04. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
05. வியாபாரத்தின் தன்மை
06. வங்கியாளர்களின் பெயர்
07. கிடைக்கக்கூடிய கடன்வசதிகள்
08. ICTAD பதிவு இலக்கம்|புத்தக இலக்கம் (3ற்கு மட்டும்)

குறிப்பு:-

பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து பின்வரும் மேலதிக தகவல்கள் கோரப்படுகின்றன.
எந்திரவியல் சேவை 3க்கு பின்வருவோர் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவார்.

அ) ICTAD தரப்படுத்தலின் கீழ் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம்|கூட்டுத்தாபனம்|சபைகளில் பதிவுசெய்துள்ளவர்கள். (பதிவுப்புத்தகத்தின் போட்டோப்பிரதி| அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

ஆ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி|வவுனியா மாவட்டங்களில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அதுபற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும். அத்துடன் அம்மாவட்டங்களில் உள்ள தமது கிளை|பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்திற்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்கவேண்டும்.

இ) உங்கள் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக் கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களைத் (7இக்கு மட்டும்) தருக.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

(சி-7780)

# உயர் கல்விக்கான புதிய வளங்களை தமிழர் கண்டறிவது எப்போது?

கடந்த 20 வருட காலமாக பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவதென்பது தமிழ் மாணவர்களைப் பொறுத்து ஒரு பெரும் போராட்டமாக மாறிவிட்டது. ஆங்கிலேயர் காலத்திலும், சுதந்திரத்திற்குப், பின்னர் 25 ஆண்டுகளாகவும் உயர்கல்வியில் கொடிகட்டிப் பறந்த தமிழர் அதற்குப் பின்னர் பெரும் தடைகள் மத்தியில் உயர்கல்வியைப் பெறவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளமை வெளிப்படையான ஒன்றாகும். தமிழ் இனத்தையே அழித்தொழிக்க நினைக்கும் சிங்கள இனவாதம் தமிழரின் கல்வியை அணுஅணுவாக சிதைக்க முற்படுவதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

ஆனால், இவ்வாறான சிங்கள இனவாதத்தின் முயற்சியை முறியடிக்க தமிழ்ச் சமுதாயம் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பதை ஆராயும்போது ஏமாற்றம் தான் எஞ்சுகிறது. வருடா வருடம் பல்கலைக்கழக அனுமதி குறித்து மட்டுமல்ல. உயர்தரப் பரீட்சை நடத்துவது குறித்தும் கூட மாணவர்கள் போராட்டங்களை நடாத்துவதும் பின்னர் சிறிது மாற்றத்துடனோ அல்லது சிறிதும் மாற்றமின்றியோ அல்லது மிகக் குறைந்தளவு எண்ணிக்கையினர் பலனடைவதுடனோ இப்போராட்டங்கள் கைவிடப்பட்டும் வந்துள்ளன.

இந்தப் போராட்டங்கள் சிங்கள அரசாங்கங்கள் மத்தியில் பெருமளவு மனமாற்றத்தை ஏற்படுத்தியதாகவோ அல்லது இவ்வாறு உயர்கல்வியில் கடைப்பிடிக்கப்படும் முறை ஒரு சமுதாயத்திற்கு எதிராக இழைக்கப்படும் அநீதி என்பதனை அவை ஏற்றுக்கொண்டதாகவோ இல்லை.

எவ்வாறு மேலும் மேலும் தமது பிடியை இறுக்கலாம், தமிழரின் உயர்கல்வியை சிதைக்கலாம் என்பதிலேயே அவை தீவிர கவனம் செலுத்தி வந்துள்ளன. மேலும் தமிழரை இரண்டாம்தர பிரஜைகள் ஆக்குவதற்கு அவர்களின் கல்வியைச் சிதைப்பதும் ஒருவழி என்பது சிங்கள இனவாதிகளின் அடிப்படைக் கொள்கையும் ஆகும்.

எனவே மாணவர்களால் நீதிகோரி இவ்வாறு நடத்தப்படும் போராட்டங்கள் பெரும் வெற்றியைப் பெற்றுத் தந்ததும் இல்லை, தருமா? என்பதும் சந்தேகமே! உயர்கல்வியும் அரசியலும் இன்று பின்னிப் பிணைந்துள்ள நிலையில் இவ்வகையான போராட்டங்கள் வெற்றியை தரமாட்டா என்று திடமாக நம்பலாம்.

இந் நிலையில் எம்மிடம் உள்ள வளங்களைக் கொண்டு தமிழ் மாணவர்களுக்கு எவ்வாறு உயர்கல்வியை வழங்குவது? அல்லது இவ்வாறு புறக்கணிக்கப்பட்ட மாணவர்களுக்கு எவ்வாறு சமூகத்திற்குப் பயன்தரத்தக்க கல்வியை வழங்குவது? என்பதுகுறித்து சிந்திப்பது இன்று முக்கிய விடயமாக உள்ளது. அல்லது கல்வியில் குறிப்பாக உயர் கல்வியில் ஒரு பாரிய வெற்றிடத்தை தமிழர்கள் எதிர்கொள்ளவேண்டி ஏற்படும்.

இவ்வகையில் தமிழர்களைப் பொறுத்தவரையில் உயர்கல்வியை வழங்கும் தலைமை நிறுவனமாக இருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பாரிய பங்களிப்பை வழங்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் இவ் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்திற்கும் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள மாணவர் அனுமதியினை பார்க்கும் போது அவற்றிற்கே ஆபத்துஏற்பட்டு விடுமோ? என்ற அச்சநிலையும் எழுந்துள்ளது.

ஏனைய பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் தொகை படிப்படியாக அதிகரித்துச் செல்லும் போது யாழ். பல்கலைக் கழகத்திற்கும் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திற்கும் அனுமதிக்கப்படும் மாணவர்தொகை படிப்படியாகக் குறைந்து செல்கின்றது, இவ் வருடம் ஏறத்தாழ 1180 மாணவர்களை அனுமதிக்கக்கூடிய வளங்களை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கொண்டுள்ள போதிலும் ஏறத்தாழமூன்றில் ஒருபங்கினரை மட்டுமே அனுமதிக்க பல்கலைக் கழகங்கள் மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இது சிறிலங்கா அரசினால் திட்டமிட்டு நடாத்தப்பட்ட ஒரு நடவடிக்கை ஆகும். இதன் மூலம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது மட்டுமல்லாது இப்பல்கலைக்கழகங்களைப் படிப்படியாகச் செயலிழக்கச் செய்வதும் அதன் நோக்கமாகும்.

மேலும் 1992/93 கல்வியாண்டு அனுமதியை எடுத்து நோக்கும் போது 1180 பேருக்கு அனுமதி வழங்கக்கூடிய வளங்களைக் கொண்ட யாழ். பல்கலைக்கழகம் 406பேருக்கு மட்டுமே அனுமதி வழங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதித்துள்ளமைமூலம்பல்துறைகளையும் சார்ந்த 774 பட்டதாரிகளை தமிழர் சமுதாயம் இழக்கிறது. மேலும் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் 460 மாணவர்களை அனுமதிக்கக் கூடிய வளங்கள் உள்ள போதும் 211 பேர் மட்டுமே அனுமதி பெறுகின்றனர். இவ்வாறு மொத்தமாக சுமார் 1000 பட்டதாரிகளை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

**சி. சிவபாலன்**

இவ்வாறான நிலையில் இவ் இழப்பை ஈடுகட்டுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவது மிக முக்கியமான ஒன்றாகும். யாழ். பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையில் இங்கு 774 மாணவர்களுக்கான வளங்கள் எஞ்சியுள்ளன. இவற்றைப் பயன்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆராயப்படுதல் அவசியம். இவ்வாறான நிலையில் நிதி நெருக்கடி ஒரு புதிய பிரச்சினையாக உருவாகலாம். அதனைக் காரணம் காட்டி கல்வி வசதிகளை மட்டுப்படுத்துவதை விடுத்து நிதிவளங்களை திரட்டுவதில் புதிய வழிகளை திறத்தல் வேண்டும்.

இவ்வாறான முயற்சியின் போது உயர்கல்வி மறுக்கப்படுகின்ற மாணவர்களுக்கு அதனை வழங்கும் போது அதற்கு முட்டுக்கட்டை போடுவதை அனைவரும் தவிர்த்தல் வேண்டும். இனரீதியாக பாதிப்பு ஏற்பட்டுள்ள இவ்வேளையில் தனிமனிதனின் நலனை விட சமுதாயத்தின் நன்மையை கருத்திற் கொள்வது பொருத்தமானதாகும்.

மேலும் யாழ். பல்கலைக் கழகம் பல்கலைக்கழகத்துக்கு வெளியே மேற்கொண்டுவரும் கற்கைநெறிகளை விஸ்தரிப்பது உயர்கல்வி மறுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் அத்துடன் இவ்வாறு சமுதாயத்துடன் பல்கலைக்கழகம் இணைவதன் மூலம் பல்கலைக் கழகத்திற்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை மக்களுடன் ஒன்றிணைந்து தடுக்க முடியும்.

தென்பகுதியில் திறந்த பல்கலைக்கழகங்கள் சிறப்புற இயங்கி வருகின்ற வேளையில் யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகம் இறுதிமூச்சை விடும் நிலையில் காணப்படுகிறது இதனை இயக்குவதற்கு வேண்டிய முழு முயற்சிகளும் மேற் கொள்ளப்படவேண்டும்.

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரியைப் பொறுத்தவரையில் அங்குள்ள வளங்கள் முழுமையாகப்பயன்படுத்தப்படும்நிலை இல்லை என்றே கூறவேண்டும். தொழில்நுட்பம் என்ற பெயரில் சில 'வெள்ளை உடுப்பு' வேலைகளுக்கான பயிற்சிகளில் கவனம் செலுத்தப்படுகிறதே ஒழிய சரியானமுறையில் அக்கல்லூரி பயன்படுத்தப்படுவதாக இல்லை. அக்கற்கை கூட மாணவர்களை விரக்திக்கு உள்ளாக்கும் வகையில் ஒழுங்கற்றமுறையில் பரீட்சைகளைக் கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது

யாழ் குடாநாட்டில் தடுக்கிவிழுந்தால் தனியார் கல்வி நிலையங்கள் மீது தான் விழவேண்டும். அவ்வளவு பெருந்தொகையில் தனியார் கல்வி நிலையங்கள் பெரும் நிறுவனங்களாக கூட வளர்ச்சி பெற்றும் அவை உயர்கல்வியிலோ தொழில் நுட்பக் கல்வியிலோ கவனம் செலுத்து பவையாக இல்லை. கரும்பலகையையும் வெண்கட்டியையும் மட்டுமே முதலீடு செய்து லாபம் சம்பாதிப்பதிலேயே இவை குறியாக உள்ளமை வேதனைக்குரிய விடயமாகும்.

இவை பெருமளவு மாணவர்களைக் கவரும் சக்தி வாய்ந்தவையாக உள்ளஅதேவேளை குறித்த மட்டத்திற்கு மேல் மாணவர்களைக் கைவிடுபவையாக உள்ளன. உயர்தர வகுப்பு வரை மாணவர்களைக் கொண்டுவரும் இந்நிறுவனங்கள்பெருமளவு மாணவர்களை இந்நிலையில் கைவிடுகின்றன.

மேலும் இவை அனைத்தும் தொழில்நுட்பக் கல்வியை வழங்கக் கூடிய பொருளாதார பலம் அற்றவை என்றும் சொல்வதற்கில்லை எனவே அவை சமுதாயத்திற்கு பயன்படக் கூடிய கற்கைநெறிகளை ஆரம்பிப்பது காலமறிந்துசெய்யும் சேவையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கோசமிடுவதாலும் கெஞ்சுவதாலும் எதையும் சாதித்து விட முடியாது. சிங்கள இனவாதம் ஒருபோதும் தமிழினத்தின் மீது இரக்கம் காட்டப்போவதும் இல்லை. இந்நிலையில் மாற்றுவழி தேடுவதே சிறந்தது.

எவ்வாறு ஆங்கிலேயர் காலத்தில் தமிழரின் கல்வி வளர்ச்சிக்கு எம்முன்னோர் பாடசாலைகளை அமைத்து பாடுபட்டார்களோ அந்நிலையை இன்று ஏற்படுத்துவதே மாற்றுவழியாக அமைய முடியும்.

மேலும் கல்வி குறித்த சிந்தனையில் பெற்றோர், மாணவர், சமுதாயம் முழுவதற்கும் ஏற்படக்கூடிய காலத்திற்கும் பொருத்தமான மாறுபட்ட சிந்தனையே தமிழர் வழி வழியாகக் கட்டிக் காத்து வந்த கல்வியைக் காப்பாற்ற உதவ முடியும்.

# இரணவிலவில் அமெரிக்க ஒலிபரப்பு நிலையம்; சூழவுள்ள மக்களின் அபாயக்குரல்

சுற்றிவர பாரிய முட்கம்பி வேலி. இவ்வேலிகளுக்கு மின்சாரம் பாய்ச்சப்பட்டுள்ளது. அதன் அருகே 'பாதுகாப்புப் பிரதேசம்' எனக் குறிப்பிடப்படும் பகுதியில் மீன்பிடிக்கத் தடை. சில இடங்களில் இரண்டு மீனவர்களுக்கு மேல் படகில் போகக்கூடாதென உத்தரவு. இவையெல்லாம் வடக்கு-கிழக்கிலுள்ள இராணுவ முகாமின் பாதுகாப்புக்கல்ல. இரணவிலவில் புதிதாக 1200 ஏக்கர் பரப்பளவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் 'வோய்ஸ் ஒவ் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு.

சிலாபம் நகரிலிருந்து புத்தளம் நோக்கிய பாதையில் 10கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது இந்த இரணவில கிராமம். கடற்கரையை அண்டிய இக்கிராமத்தின் அமைதி, கனரகவாகனங்களின் அழிப்பு நடவடிக்கையாலும் ஆயுதம் ஏந்திய பொலிஸாராலும் குலைந்துபோயுள்ளது. 5000க்கு மேற்பட்ட தென்னை மரங்கள் அடியோடு சாய்க்கப்பட்டுள்ளன. மேலும் பல்லாயிரக்கணக்கானவற்றை அழித்து நிமிர்ந்துநிற்கப் போகிறது 'வோய்ஸ் ஒவ் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலையம்.

1983இல் அதிஉத்தமர் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் கைச்சாத்திடப்பட்ட 99வருட குத்தகை ஒப்பந்தத்திற்கமைய 1200ஏக்கர் நிலப்பரப்பில் 1500 கிலோவாட் சக்தி கொண்ட ஒலிபரப்பு நிலையம் அமெரிக்காவினால் அமைக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே இலங்கையில் ஏக்கலையில் 105 கிலோவாட் சக்தி கொண்ட வோய்ஸ் ஒவ் அமெரிக்க ஒலிபரப்பு நிலையம் இயங்கிவரும் நிலையில் இந்த ஒலிபரப்பு நிலையமும் அமைக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்காவின் ஒலிபரப்பு நிலையம் அமைக்க இப்பகுதியில் அனுமதி வழங்கியதை எதிர்த்து ஒவவொரு வெள்ளியும் அக்கிராம மக்களாகிய கத்தோலிக்கர்கள் நடத்திய ஊர்வலங்களுக்கு வழமை போல் மதப்பூச்சும் பூசப்பட்டு ஆயுதமுனையில் தடைவிதிக்கப்பட்டு வருகிறது. அமைதியாக அம்மக்களால் நடாத்தப்பட்ட ஊர்வலம் துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்தப்பட்டது. அவ்விடத்தில் புதிய ஒரு பொலிஸ்நிலையம் அமைக்கப்பட்டுவிட்டது.

அமெரிக்க வானொலி நிலையத்தை செயற்பட வைக்க 1500 கிலோவாட் மின்சாரம் தேவைப்படுகிறது. இதனை ஐதரசன் மின்உற்பத்தி நிலையம்மூலம் பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் அணுக்கதிர்வீச்சு அபாயம் ஏற்படும் என கிராமவாசிகள் அஞ்சுகின்றனர். இதனால் சுகாதார சீர்கேடுகள் உயிரழிவுகள் ஏற்படலாம் என அவர்கள் மிரண்டுபோயுள்ளனர்.

இவ் வானொலி நிலைய கட்டுமானவேலைக்குபதினொன்றரை இலட்சம் கியூப் கற்கள் 2 இலட்சம் கியூப் மணல் தேவைப் படும் என கணக்கிடப்படுகிறது. இவற்றை ஏற்றிப்பறிக்கும் போது பறக்கும் தூசிப்படலம் உடனடி ஆபத்தென அவர்கள் கூறுகின்றனர். இதனால் சிறுவர்களுக்கு நோய்கள் ஏற்படத் தொடங்கி விட்டதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவை எல்லாவற்றிலும் விட காலப்போக்கில் இவ் ஒலிபரப்பு நிலையம் விஸ்தரிக்கப்படும் போது தங்கள் நிலங்கள் பறிக்கப்பட்டு விடும் எனசூழவுள்ள கிராமத்தவர்களுமஞ்சுகின்றனர். ஏற்கனவே இந்த ஒலிபரப்பு நிலையத்தின் பாதை அமைப்பிற்கென ஒன்பது குடும்பங்களின் நிலங்கள் குறிப்பிடத்தக்க அளவு சுவீகரிக்கப்பட்டுள்ள அனுபவ

( 8 ஆம் பக்கம் பார்க்க )

# அதிக தமிழ் மாணவர்களை பல்கலைக்கு அனுமதிக்குக

அண்மையில் யாழ். மாவட்டத்திற்கு அறிவிக்கப்பட்டபல் கலைக்கழக வெட்டுப்புள்ளிகளால் நாம் மிகவும் ஏமாற்றமும், விரக்தியும் அடைந்துள்ளோம் எம்மில் சிலர் மருத்துவம் பயில விரும்பினார்கள். ஆனால் அவர்களுக்கு வேறு கற்கை நெறிக்குத்தான் அனுமதி கிடைக்கும். அதே போன்று பொறியியல் நெறியைப் பயில விரும்பிய எம்மிற் சிலர் வேறு கற்கை நெறிக்குத் தான் அனுமதி பெறுவர். மறுபுறம் உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம அல்லது கலை கற்கைநெறி அல்லது வர்த்தகம் முகாமைத்துவம், சட்டம் பயில விரும்பிய மாணவர்கட்கு பல்கலைக்கழகத்திற்குச் செல்லாதவாறு கதவடைக்கப்பட்டு அவர்கள் நடுத் தெருவில் விடப்பட்டுள்ளனர்.

எனவே 1992/93 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக கல்விற்கு அனுமதிக்கப்படும் தமிழ் மாணவர்கள் தொகை வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது என்பது புலனாகின்றது. கடந்த ஐந்து ஆண்டுகளிலே பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் தொகையிலும் பார்க்க 92/93 ஆம் ஆணடு அனுமதி பெறும் மாணவர்கள் மொத்த தொகைமிகவும்குறைவானது. இது மிகவும் அசாதாரணமான ஒரு நிலை என்றே நாம் கருதுகினம்றோம்.


இந்த அசாதாரண நிலைக்கு 1991/92 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் நிலவிய சூழலே காரணம் என்பது யாவரும் அறிந்த விடயம். மாணவர்கள் எத்தனையோ கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்தது. ஒருபுறம் மின்சாரம் இல்லை. மறுபுறம் மண்ணெண்ணெய் விநியோகம் வரையறுக்கப்பட்டிருந்தது துடன் விலையும் அதிகமாகக் காணப்பட்டது. உணவுப் பற்றாக்குறையினால் மாணவர்கள் கடினமாக படிக்க வேண்டியதற்குத் தேவையான உடல் நிலையைப் பெற்றிருக்க முடியவில்லை. விமானத்தாக்குதலால் அடிக்கடி பாடசாலைகள்

> 1992-93 பல்கலைக்கழக அனுமதிக்கு யாழ். மாவட்டத்திற்கு அறிவிக்கப்பட்ட வெட்டுப்புள்ளிகளால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவிற்கு நேற்று அனுப்பிய மகஜர் இது.

மூடப்பட்டிருந்தன. அத்துடன் இடம்பெயர்ந்த மாணவர்களால் பாடசாலைகளில் மேலதிக மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர் போக்குவரத்து வசதிகள் இன்மையால் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்குப்பல சிரமங்களை எதிர் நோக்கினர். அத்துடன் தமது வீடுகளில் இருந்தும், கிராமங்களிலிருந்தும் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. இவையாவற்றிற்கும் மேலாக எந்நேரம் விமானத் தாக்குதலோ, எறிகணைத் தாக்குதலோ நடாத்தப்படலாம் என்ற பீதியினால் மாணவர்கள் மனோ நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டு இருந்தது. எனவே மாணவர் என்ற ரீதியில் எம் வாழ்க்கை துயர் நிறைந்ததாகவிருந்தது இவற்றைத் தவிர தமிழ் மாணவர்களுக்கு தான் வினாத்தாள்கள் கடினமானதாகவும், வினோதமானதாகவும்இருந்ததாக பெரும் பான்மையான மாணவர்கள் கருதுகின்றனர். வினாத்தாள்களைத் திருத்துவதிலும் வேண்டும் என்றே சில கெடுபிடிகள் இருந்தனவோ என்று மாணவர்கள் கருதுகின்றனர். இ காரணங்கள் எல்லாவற்றின் இணைப்புத்தான் எமது மாணவர்கள் சோதனையில் திறமையாக செயற்பட முடியவில்லை என நாம் கருதுகின்றோம்.

எமது மாவட்டம் ஒரு யுத்த பிரதேசமாக இருப்பதை மனதில் கொண்டு வெட்டுப் புள்ளிகளை குறைத்து எமக்கு சில விசேட சலுகைகளை வழங்குமாறு நாம் தயவாக உங்களை வேண்டிக்கொள்கின்றோம். கடந்த ஐந்து ஆண்டுகளிலே பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட சராசரி மாணவர் எண்ணிக்கையை பேணியே இவ்வாண்டில் கூடுதலான தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்பது நிச்சயம்.

1985 ஆம் ஆண்டிலே அறிவிக்கப்பட்ட வெட்டுப்புள்ளிகள் பின்னர் இலங்கை ரீதியாக குறைக்கப்பட்டதை நாம் சுட்டிக்காட்டவிரும்புகிறோம். ஏனெனில் அவ்வாண்டில் மாணவர்கள் பரீட்சையில் தமது பூரண திறமையைக் காட்டியிருக்க முடியாமையினால் ஆகும். இதனை ஒரு முன்உதாரணமாகக் கொண்டு யுத்தத்தினா. பாதிக்கப்பட்ட எமது பகுதிகளுக்கான வெட்டுப்புள்ளியை விசேட சலுகை அடிப்படையில் குறைக்குமாறு உங்களைத் தயவாகக் கேட்கிறோம்




மருத்துவம், விவசாயம், உயிரியல்விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், கலை வர்த்தக முகாமைத்துவ கற்கை நெறிகளுக்கு மேலும் கூடுதலாக மாணவர்களை அனுமதிக்கக் கூடிய நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்ளது என்பதை நாம் அறிகின்றோம். ஆனால் துர் அதிர்ஷ்டவசமாக வெட்டுப்புள்ளிகளே இதற்குத் தடையாக இருக்கின்றது.

இறுதியாக எம்முடைய நிலை குறித்து அனுதாபம் கொண்டு வெவ்வேறு பீடங்களுக்கு கூடுதலான தமிழ் மாணவரை அனுமதிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு தயவாக உங்களை வேண்டிக்கொள்வதுடன் எமக்கு எதிர்காலத்திலே விஷேட பரீட்சைகள் எதையும் நடாத்த வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கின்றோம். வட-கிழக்கிலே ஒரு பரீட்சையை நடாத்த முடியாவிட்டால் முழு இலங்கைக்குமான பரீட்சைகளை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இதற்கு ஒரு முன் உதாரணம் உண்டு என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அதாவது 1989 இல் தெற்கில் கொந்தளிப்பு நிலை தோன்றியபோது இலங்கை பூராகவும் எல்லாப் பரீட்சைகளும் ஒத்திப்போடப்பட்டன என்பதை நாம் நினைவு கோர விரும்புகின்றோம்.

## இரணவிலவில்

மும் அவர்களுக்கு இருக்கிறது.

மேலும் பெரிய யுத்தம் ஒன்று மூளுமானால் இந்த ஒலிபரப்பு நிலையத்தை பிரசார மற்றும் இராணுவ தேவைகளுக்கும் அமெரிக்கர் பயன்படுத்தக் கூடும். இதனால் இப்பகுதி தாக்குதலுக்கு உள்ளாகலாம் எனவும் அச்சம் நிலவுகிறது.

ஒலிபரப்பு நிலையத்தின் ''பாதுகாப்புப் பிரதேசம்'' எனக்கூறி மீனவர்கள் குறிப்பிட்ட பிரதேசத்தில் மீன்பிடிக்கக் கூடாது என விரட்டப்படுகின்றனர். சில இடங்களில் மீனவர்கள் இரண்டு பேருக்கு மேல் படகில் போகக்கூடாது என்றும் தடுக்கின்றனர். போதாதற்கு கடற்பரப்பை மீன்பிடிக்குக்கட்டுப் படுத்தப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

இரணவில பிரதேச மக்களின் போராட்டத்தைத் தொடர்ந்து இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசவின் செயலாளர் எச். ஜே. விஜயதாச சென்ற ஆண்டு பெப்ரவரியில் சிலாபம் ஆயருக்கு எழுதிய கடிதத்தில் ''வானொலிநிலையம் தொடர்பாக அச்சம் கொள்ளத் தேவையில்லை. இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி சூழலுக்கோ சமூக கலாசாரத்திற்கோ எவ்வித இடைஞ்சலும் ஏற்பட இடமில்லை'' என தெரிவித்தார்.

மேலும் வோய்ஸ் ஒவ் அமெரிக்க பணிப்பாளர் பத்திரிகைகளுக்கு அனுப்பிய அறிக்கையில், ''இராணுவரீதியான பணிகள் எதனையும் செய்யப் போவதில்லை இதன் நிர்மாணத்தின் மூலம் யாருடைய பிழைப்பும் பாதிக்கப்

(2ஆம் பக்கம் பார்க்க)

இன்றுமுதல் யாழ்நகரில் குதூகல ஆரம்பம்...

ஜவுளிக்கான புதியதோர் சமுத்திரம்

விரையுங்கள்......

நியூ ஹப்பி ரெக்ஸ்ற்

NEW HAPPY TEXT


சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட

நவீன, தரமான சகல துணிவகைகளையும்,

றெடிமேட் ஆடை வகைகளையும்

ஒரே இடத்தில் சிறந்த தெரிவுடன் மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

இன்றே நாடுங்கள்



நியூ

ஹப்பி

ரெக்ஸ்ற்

146, நவீனசந்தை,

(வைரவர் கோயில் அருகாமை)

யாழ்ப்பாணம்.

(6404)

யாழ்ப்பாணம்

# 'ஹஸ்ரத்பால்' பள்ளிவாசல் முற்றுகை; குழம்பிய நிலையில் காங்கிரஸ் அரசு

காஷ்மீரின் கவர்ச்சி மிகு ஏரிகளில் ஒன்றான 'நகின் ஏரி' யின் கரையில் அமைந்துள்ள 'ஹஸ்ரத்பால்' பள்ளிவாசல் கடந்த 15ஆம் திகதி நள்ளிரவு இந்திய இராணுவத்தால் முற்றுகை இடப்பட்டது. பத்தாயிரம் துருப்புக்கள் கவச வாகனங்கள் சகிதம் இம்முற்றுகையை நடத்தின. 'ஹஸ்ரத்பால்' பள்ளிவாசலினுள் உள்ள 100க்கும் மேற்பட்ட காஷ்மீர் தீவிரவாதிகளைக் கைது செய்வதே இம்முற்றுகைக்கான காரணமாகும்.

இதேவேளை, இம்முற்றுகையினுள் சிறுவர்கள், பெண்கள் உட்படசுமார் 50 பொதுமக்களும் சிக்கிக் கொண்டுள்ளனர். இன்றுடன் இரண்டு வாரங்களாகும் இம்முற்றுகையானது ஒருதேக்க நிலையை அடைந்துள்ளது. அதாவது, இந்திய இராணுவம்பள்ளிவாசலுக்குள் புகுந்து தீவிரவாதிகளைகைது செய்ய இன்னமும் தயாராக இல்லை என்பதும், தீவிரவாதிகள் வெளியில்வந்து சரணடைய சம்மதிக்கவில்லை என்பதுமே இத்தேக்க நிலைக்குக் காரணமாகும்.

ஆனால், இத்தேக்க நிலைக்கு 'ஹஸ்ரத்பால்' பள்ளிவாசலில் வைக்கப்பட்டுள்ள புனித சின்னமான நபி அவர்களின் 'முடியோ' அன்றி, புனிதமான பள்ளிவாசலுக்குள் இராணுவத்தின் பாதணிகள் படுவதினால் புனிதஸ்தலம் மாசுபட்டு விடும் என்பதினாலோ அல்ல. ஏனெனில், இந்திய இராணுவத்தின் பாதணிகள் கடந்த காலத்தில் பல புனித ஸ்தலங்களை மாசுபடுத்தியுள்ளன. இந்தியாவின் பஞ்சாப் பொற்கோவிலில் இருந்து இலங்கையில், தமிழர் தாயகத்தில் உள்ள அநேக கோவில்களும் இவ்வாறு மாசுபடுத்தப் பட்டவையே.

இதேவேளை, இந்திய ஆட்சியாளர்களும் வணக்க ஸ்தலங்களைப் பாதுகாப்பவர்கள் என்றோ, அன்றி சிறுபான்மை இனங்களின் மத உரிமைகளை மதிப்பவர்கள் என்றும் எவரும் சொல்லிவிட முடியாது. அவ்வாறு அவர்கள் பாதுகாப்பு அளிப்பவர்களாக இருப்பின் கடந்த வருடத்தின் இறுதியில் பாபர் மசூதி இடிபட்டிருக்க வாய்ப்பேற்பட்டிருக்காது.

உண்மையில் இந்தியா பெயரளவிலேயே மதசார்பின்மை என்ற வேடத்தைத் தாங்கி நிற்கின்றது. பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் அத்வானி அஸ்வமேத யாகங்களை நடத்துபவராக இருந்தால், காங்கிரஸ் கட்சித் தலைவர் நரசிம்மராவ் சோம யாகம் நடத்துபவராகவே உள்ளார். இந்நிலையில், மத சார்பின்மை பேச்சளவினதானது மட்டுமே.

ஆனால் இந்தியாவின் சிலமாநிலங்களில் உள்ள தீவிரவாதிகள் இன்னமும் இந்தியாவின் மதசார்பின்மையை நம்புவதுபோன்றே சில அவர்களின் நடவடிக்கைகள் உள்ளன. அதாவது, பஞ்சாப் தீவிரவாதிகள் அன்று பொற்கோவிலுக்குள் அடைக்கலம் தேடினர். தற்பொழுதுகாஷ்மீர் தீவிரவாதிகள் பொற்கோவிலின் படிப்பினை இருந்தும் 'ஹஸ்ரத்பால்' பள்ளிவாசலுக்குள் அடைக்கலம் தேடியுள்ளனர்.

இந்நிலையில், 'ஹஸ்ரத்பால்' பள்ளிவாசலுக்குள் இராணுவத்தை அனுப்புவதோ, டாங்கிகளை ஓட விடுவதோ இந்திய அரசிற்கு பெரிய விடயமொன்றல்ல ஆனால், அதன்விளைவு, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு அப்பாலும் பிரதிபலிக்கும் என்பதோடு இந்திய அரசியலில் பாரிய தாக்கத்தை விளைவிக்கும் என்பதே இராணுவத்தை அவசரப்பட்டு பள்ளிவாசலுக்குள் அனுப்பாமல் இருப்பதற்குக் காரணமாகும்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் ஏற்கனவே இந்தியாவின் கையைவிட்டு நழுவிச் செல்வதை அவதானிக்க முடிகிறது. தற்பொழுதுகூட ஹஸ்ரத்பால் முற்றுகையின் பின் ஊரடங்கையும் மீறி மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். இதில் இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சுமார் 40 பேர் கொல்லப்பட்டுமுள்ளனர். இந்நிலையில் முற்றுகை மேலும் தீவிரமடையும் பட்சத்திலோ அன்றி இராணுவம் பள்ளிவாசலுக்குள் புகமுயன்றாலோ நிலைமை கட்டுக்கடங்காமலும் போகலாம்

இது ஒருபுறமிருக்க 'ஹஸ்ரத்பால்' பள்ளிவாசலை இடித்துத்தள்ளுவதற்கு இராணுவத்திற்குள்ள முட்டுக்கட்டை வட-இந்திய மாநிலங்கள் நான்கிலும்மத்திய அரசின் பரிபாலனத்திலுள்ள டில்லி பிரதேசத்திலும் நடைபெறவுள்ள தேர்தல்கள் ஆகும். இத்தேர்தலானது பிரதமர் நரசிம்மராவைப் பொறுத்து ஒரு பெரும் சவாலாகும். அவரது எதிர்கால அரசியலுக்கான பரிசோதனைக்களமுமாகும்.

இத் தேர்தலின்முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்ட இந்தியா ருடே ''அது ஒரு தேர்தல் என்ற அளவுடன் நிற்காது தேசத்தின் அரசியலுக்கு கருத்து ரீதியாக ஒரு பரிமாணம் சேர்க்கக் கூடிய வகையில் பாரதீய ஜனதாவின் இந்து தத்துவம் பற்றி கருத்து வாக்கெடுப்பாக அமையும். அயோத்திக்குப் பின்பும், அரசியல் போக்கு பாரதீய ஜனதா கட்சி கீறிய கோட்டிலேயே செல்கின்றது''

''பிரதமர் பி. வி. நரசிம்மராவிற்கே இது ஒரு கண்டம்தான். தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கணிசமாகச் சரிவடைந்தால் கட்சிக்குள்ளேயே போட்டியாளர்கள் கோரும் குரல்வலுக்கும்'' எனக் குறிப்பிட்டுள்ளதோடு ''இந்திரா காங்கிரஸிற்கும் இன்று செய் அல்லது செத்துமடி என்ற நிலை அது சுதாகரித்துக்கொள்ளத் தவறினால் இப்பகுதியில் இருந்து மட்டுமல்ல தேசத்தில் இருந்தே நொட்டித்தள்ளப்பட்டுவிடும்'' எனத்தெரிவிக்கின்றது.

இவ்வாறாக முக்கியம் பெறும் தேர்தலே, ஹஸ்ரத்பால் முற்றுகை ஒரு தேக்க நிலைக்குக் கொண்டுவந்துள்ளது. அதாவது இத் தேர்தலில் முஸ்லிம் வாக்காளரின் தேவை இந்திரா காங்கிரஸைப் பொறுத்து மிகவும் முக்கியமானதொன்றாகும். முஸ்லிம் மக்களின் மனதைப் பாதிக்கும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படின் அது தேர்தலில் காங்கிரஸிற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.

அதாவது 'ஹஸ்ரத்பால்' பள்ளிவாசலுக்குள் இராணுவத்தை அனுப்புவதென்பது இந்தியாவின் மொத்தச் சனத்தொகையில் பதினொரு வீதமான முஸ்லிம்களின் உணர்வுகளுடன் விளையாடும்செயலாகும். இதுபொற்கோவிலுக்குள்இராணுவத்தை அனுப்பியதைவிட மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. அத்தோடு, காங்கிரஸ் கட்சிக்கு என்றுமில்லாத பின்னடைவையும் ஏற்படுத்தக் கூடியதும் ஆகும்.

ஏனெனில் தேர்தல் இடம்பெறும் நான்கு மாநிலங்களில் கணிசமான தொகையில் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். உத்திரபிரதேசத்தின்மொத்த சனத்தொகையில் 15.9 வீதத்தினரும் ராஜஸ்தானில் 7.3 வீதத்தினரும் மகராஸ்டிடத்தில் 4.8 வீதத்தினரும் ஹிமாலயப் பிரதேசத்தில் 1.6 வீதத்தினரும் முஸ்லிம்களாகும். அத்தோடு தேர்தல் நடைபெறவுள்ள மத்திய அரசின் நேரடி பரிபாலனத்திலுள்ள டில்லி பகுதியிலும் 7.8 வீதத்தினர் முஸ்லிம்கள் ஆகும்.

இதில் குறிப்பாக இந்தியாவிலுள்ள மாநிலங்களில் பெரிய சனத்தொகையைக் கொண்ட உத்திரபிரதேசமே இந்தியாவிலேயே அதிக முஸ்லிம்களைக்கொண்ட மாநிலம் ஆகும். ஜம்மு காஷ்மீரில் உள்ள முஸ்லிம்களின் எண்ணிக்கையைவிட உத்திர பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களின் தொகை அதிகமாகும். இவர்கள் உத்திர பிரதேசத்தின் பல தேர்தல் தொகுதிகளின் வெற்றிகளைத் தீர்மானிக்க கூடியவர்கள் ஆவர்.

இந்நிலையில் ஏற்கனவே உட்கட்சிப் பூசலினாலும் பெரும் அரசியல் பின்னடைவுகளினாலும் பெரிதும் ஆட்டம் கண்டுள்ள காங்கிரஸ் கட்சி புதிய தேர்தல் வியூகம் ஒன்றை அமைத்துக்கொள்ளவேண்டிஉள்ளது இத்தேர்தல்வியூகம் பாரதீய ஜனதாக் கட்சியின் உணர்ச்சியைத் தூண்டும் மத அடிப்படைவாதத்துடன் போட்டியிடக் கூடியதான உணர்வுபூர்வமான வியூகமாக இருத்தல் அவசியமானதாகும்.

இத் தேர்தல் வியூகத்தில் இந்துக்களுடன் பகைத்துக் கொள்ளாததுடன், முஸ்லிம்கள் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் மத சார்பின்மைவாதிகள் ஆகிய பலதரப்பினரையும் அரவணைத்துச் செல்லக் கூடியதாக இருக்குமாறு கவனிக்கப்பட வேண்டியது காங்கிரஸைப் பொறுத்து முக்கியமானதாகும்.

இந்நிலையில் தான் 'ஹஸ்ரத்பால்' ராணுவ முற்றுகை குறித்தும் காங்கிரஸ் கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது. ஏற்கனவே பாபர் மசூதி விவகாரத்தில் முஸ்லிம்கள் காங்கிரஸ் கட்சியின் மீதும் நரசிம்மராவின் மீதும் நம்பிக்கை இழந்து போயுள்ளனர். இந் நிலையில், 'ஹஸ்ரத்பால்' பள்ளிவாசல் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பட்சத்தில் முஸ்லிம்களின் நம்பிக்கையை முற்றாக இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் காங்கிரஸிற்கு ஏற்பட்டுவிடக் கூடும்.

ஆனால், இதற்காக ஹஸ்ரத்பால் முற்றுகை இராணுவம் கைவிடுவதோ அன்றி காஷ்மீர்தீவிரவாதிகளை தப்பிப் போக அனுமதிப்பதோ இதற்கு வழியாகவும் அமைய முடியாது. அவ்வாறு ஏற்படுமாயின் பள்ளிவாசலுக்குள் இராணுவம் புகுவதைவிட மோசமான விளைவே காங்கிரஸ் கட்சி எதிர் கொள்ள வேண்டி ஏற்படும். அதாவது நான்கு மாநிலங்களிலும் உள்ள பெரும்பான்மை இந்துக்களின் எதிர்ப்பினைச் சம்பாதிக்க வேண்டிய நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாது போகும். இது பாரதீய ஜனதாக் கட்சியின் கை ஓங்குவதற்கு நேரடியாக வழிவகுக்கும் சம்பவமாகவே இருக்கும்.

இவ்வாறாக இரண்டும் கெட்டான் நிலையில் காங்கிரஸ் கட்சி அரசியல் ரீதியாகத் தீர்மானம் எடுக்க முடியாமல் குழப்பமடைந்த நிலையில் காணப்படும் வேளையில், முற்றுகை தொடர்பாக இராணுவத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் கருத்து வேறுபாடுகளும் உருவாகியுள்ளன. இராணுவம் முற்றுகை தொடர்ந்து நீடிப்பதைத் தவிர்த்து விரைவில் பிரச்சினையைத். தீர்ப்பதற்கே விரும்புகின்றது, இதற்காக இராணுவம் பள்ளிவாசலுக்குள் பிரவேசிப்பதற்கும் தயாராகவே உள்ளது.

## ஜெயராஜ்

இதனால் அரசாங்கம் தீர்மானம் எடுக்க முடியாமல் தடுமாறுவது இராணுவத்திற்கு ஓரளவு எரிச்சலை ஊட்டும் சம்பவமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அத்தோடு இராணுவம் ஒரு போதும் முற்றுகையைத் தளர்த்தும் என்று எதிர்பார்க்க முடியாது இதனை இந்திய இராணுவத்தளபதி பி சி. ஜோஷி வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.'' கெரிலாக்கள் சரணடையும் வரை முற்றுகை நீடிக்கும்'' எனக் கூறிய ஜோஷி ''ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் ஏற்பட்டால் அன்றி தாக்குதல் நடைபெறாது, கெரில்லாக்களைச் சரணடையச் செய்யவே முற்றுகை நடைபெறுகின்றது.'' எனவும் தெரிவித்துள்ளார். ஜோஷியின் இவ் அறிவிப்பானது இராணுவம் தாக்குதலை தாமதித்தாலும் முற்றுகையைக் கைவிடுவதை விரும்பப் போவதில்லை என்பதைக் காட்டுவதாகவே உள்ளது.

இந்நிலையில் காங்கிரஸ்கட்சி அரசாங்கம் ஹஸ்ரத்பால் முற்றுகை விவகாரத்தில் பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆட்சிக்கு வந்ததில் இருந்து பெரும் நெருக்கடிகளையும் பின்னடைவுகளையும் சந்தித்துவரும் நரசிம்மராவிற்கு இப் பிரச்சினை நான்கு மாநிலங்களின் தேர்தலின் முன் வந்துள்ள அக்கினிப்பரீட்சை என்றே கூறலாம்.

இந்நிலையில் இப்பிரச்சினையை நரசிம்மராவ் தலைமையினை காங்கிரஸ்கட்சி சமரசமாக தீர்த்து வைக்கவே பெரிதும் முனையக் கூடும். இதன் வெளிப்பாடாகவே முற்றுகைக்குள்ளாகியுள்ள தீவிரவாதிகளுக்கும் பொதுமக்களுக்கும் உணவும் மருந்துப் பொருட்களையும் அவர்களின் விருப்பத்தின் படி காஷ்மீர் நிர்வாகம் அனுப்பி வைக்க சம்மதித்துள்ளது. ஆனால், இச்சமரசத்தில் தீவிரவாதிகள் சரணடைய வேண்டும் என்பதில் அரசாங்கம் தனது நிலையை மாற்றிக் கொள்ளும் என்பது சந்தேகமே.

ஆனால், சமரசத் திட்டங்கள் தோல்வி அடையும் பட்சத்தில் இராணுவ நடவடிக்கைக்கு காங்கிரஸ் அனுமதி வழங்கும் என்றே எதிர்பார்ப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகும். ஏனெனில், முஸ்லிம்களின் வாக்குகளுக்காக பெரும்பான்மை இந்துக்களின்வாக்கைஇழக்க காங்கிரஸ் தயாராய் ஒருபோதும் இருக்கப்போவதில்லை.

---

## இடம்பெயர்ந்த மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள்

அரச சார்பற்ற நிறுவனங்களின் பராமரிப்பிலுள்ள அகதிமுகாம் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதி இலவசமாக வழங்கப்படுகிறது.

யுனிசெவ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 6873 பொதிகளும் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள 5-ம் ஆண்டிற்கு உட்பட்ட பாடசாலை மாணவருக்குவழங்கப்படுகிறது

இப் பொதிகள் ஒவ்வொன்றிற்குள்ளும் இரண்டு அப்பியாசக் கொப்பிகள், பேனா, பென்சில், அளவு கோல் ஆகியன காணப்படுகின்றன. இவற்றின் பெறுமதி சுமார் 50 ரூபாவரை இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)|(சி)

## சந்திக்க வேண்டுகோள்

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை சகல ஊழியர்களும் எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவுகள் சம்பந்தமாக கலந்தாலோசிப்பதற்காக தற்காலிக காரியாலயத்திலுள்ள கணக்காளரை சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## அரசசேவை ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை இல்லை

### டி. பி. விஜேதுங்க தெரிவிப்பு

(இரத்தினபுரி)

எழுதுவினைஞர் மற்றும் உயர்தரங்கள் தவிர ஏனைய தரங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கு போட்டிப் பரீட்சை முறை பின்பற்றப்படமாட்டாது என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அறிவித்துள்ளார்

இரத்தினபுரி நகரசபையில் மாவட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் முன்னிலையில் இவ்வாறு தெரிவித்த அவர் ஊழியர்களின் நலன் கருதியே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார்

# ஆபத்தான வழியில் செல்லும் ஜனாதிபதி விஜேதுங்கா

## பி. பி. சி. தெரிவிப்பு

(கொழும்பு)

''வடக்கு கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடுமையான அரசியல் போக்குடன் இராணுவ அணுகுமுறையையும் இணைத்து உறுதியான இராணுவத் தீர்வைக் காண்பதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது'' இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் கடந்த ஆறுமாத கால ஆட்சி குறித்து பி. பி. ஸியின் ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது அரசு தற்பொழுது ஆபத்தான வழியைப் பின்பற்றி வருகிறது. விரைவில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்ற நம்பிக்கை ஒரு புறம். அரசுப் பணம் பெருமளவில் செலவானாலும் யுத்தத்தை மேலும் முனைப்பாக நடாத்துவது எனபது மறுபுறம். அரசின் இவ்வாறான போக்கில் ஆபத்துக்கள் அதிகமாக உள்ளன.

கடந்த சில மாதங்களாக வட-கிழக்கு யுத்தம் தொடர்பாக அரசின் போக்கு கடும் போக்காக இறுகி வருகிறது. இனப்பிரச்சினையே இங்கு இல்லை என்று ஜனாதிபதி கூறிவிட்டார். சிங்கள, பௌத்த மதக் கொள்கைகளே நாட்டின் தலையாய கொள்கைகளாக இருக்க வேண்டும் என்ற கருத்தை நோக்கி அரசு சென்று கொண்டிருக்கிறது. பௌத்த மதக் கோட்பாடுகளை பாதுகாக்க வேண்டும் என்றும் அரசு உறுதி பூண்டுள்ளது. அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில்பெரும்பான்மை இனத்தவரைக் கவருவதற்காக வகுக்கப்பட்டிருக்கும் தந்திரமே இது என்றும் இக் கண்ணோட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

## ஒன்றுகூடல்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் மாதாந்த ஒன்றுகூடல் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பேரவை மண்டபத்தில் நடைபெறும்.

## உதைபந்தாட்டம்

வலிகாமம் மேற்கு உதைபந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்த கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டிகளில் கலைநகர் அணியை எதிர்த்து தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் அணியும் சுன்னாகம் ஸ்கந்தா அணியை எதிர்த்து வட்டு வி. க. அணியும் மோதவுள்ளன. போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா மைதானத்தில் பி. ப. 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.

## பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி

யாழ். மாவட்ட பாடசாலைகளுக் கிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 15 வயதுப் பிரிவுக்குரிய போட்டிகளில் இன்று நடைபெறவுள்ள போட்டிகளின் விபரம் வருமாறு: இப்போட்டிகள் பி. ப. 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

நெல்லியடி ம.ம.வி. மைதானத்தில்புனிதஜோசப்ம.வியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரியும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை எதிர்த்து நெல்லியடி ம. ம. வித்தியாலயமும் புனித ஹென்றியரசரை எதிர்த்து இமையாணன் அ. த. க. பாடசாலையும் மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் மட்டுவில் ம. வித்தியாலயத்தை எதிர்த்து அருணோதயாக் கல்லூரியும் டிறிபேக் கல்லூரியைஎதிர்த்து யாழ். இந்துக் கல்லூரியும் கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வியை எதிர்த்து புங்குடுதீவு மகா வித்தியாலயமும் மோதவுள்ளன.

## வாதுவவிலிருந்து பொருள் இறக்கும் பணி மந்த கதி

வாதுவ கப்பலில் இருந்து அத்தியாவசிய உணவுப்பொருள்களை இறக்கும்பணி மந்த கதியில் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலநிலை சீரற்ற காரணத்தால் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே பொருள்கள் கப்பலிலிருந்து இறக்கப்படுகின்றன. இக் கப்பலிலிருந்து 1160 மெற்றிக் தொன் மா இன்னும் இறக்கப்படாது இருப்பதாக செயலக புனர்வாழ்வு பிரிவு தெரிவித்தது.

கடந்த ஒருவாரமாக தரித்து நிற்கும் இக்கப்பலில் குடிநீர் தீர்ந்து விட்டதால் ஓரிரு தினங்களில் நீர் நிரப்புவதற்காக இது திருமலை செல்லவுள்ளதாகவும் அவ்வாறு செல்லும் பட்சத்தில் மா இறக்கும்பணி மேலும் தாமதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச, பா)

## 3250 பரல் மண்ணெய் றுகுணுவில் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கான 3250 பரல் மண்ணெண்ணெய் யுடன் றுகுணு கப்பல் கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு வரவுள்ளது.

தற்போது கொழும்பு துறைமுகத்தில்மண்ணெண்ணையை ஏற்றிக் கொண்டிருக்கும் இக் கப்பல் எதிர்வரும் முதலாம் திகதி அங்கிருந்து பருத்தித்துறை நோக்கி புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 3500 பரல் மண்ணெண்ணெய்1000 பரல் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு கோமாரி கப்பல் விரைவில் பருத்தித்துறைக்கு வரவுள்ளது. இக்கப்பலில் தற்போது மேற்படி எண்ணெய்கள் ஏற்றப்பட்டுக் கொண்டிருப்பதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விரு கப்பல்களும் இங்கு வந்து சேர்ந்ததும் யாழ். குடாநாட்டில் மண்ணெண்ணெய் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் பெருமளவில் வீழ்ச்சியடையும் என நம்பப்படுகிறது. (ச, பா)

### சமஷ்டி

தற்கு இத்தகைய கூட்டாட்சி அமைப்பு உதவிடும் என்றார்.

சிறுபான்மை இனமக்கள் கண்ணியத்துடனும் பெருமையுடனும் வாழ்வதற்கு உதவிட காந்தி போதித்து கடைப்பிடித்த சகிப்பு தன்மையை பின்பற்றுவதன் தேவையை அவர் வலியுறுத்திக் கூறினார்.

### வடக்கு

உரையாற்றிய அவர் கிழக்கு பகுதி மக்கள் இத்தகைய விருப்பத்தைத் தெரிவித்தால் அது அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கும்.

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறும். ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் குறித்த தினத்தில் நடைபெறும் என்றார்.

மேலும் 'பயங்கரவாதிகள்' சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் இந்தப்பிரச்சனையைஓர் இனப்பிரச்சினையாக எடுத்துக் காட்டுவதற்கு சகல வழிகளாலும் முயற்சித்து வருகின்றனர். ஆனால் இது பயங்கரவாதப் பிரச்சினையே என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்

### யுத்த

கப்பட்டுள்ளார் என்றும் அவரது செய்திகளையே பத்திரிகையில் வெளியிட வேண்டும் என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

### மோட்டார்

தொடக்கம் மாலை 1.00மணி வரையும் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் ஊர்தி அடிச்சட்ட இயந்திர மூல ஆவணங்கள் உள்ளோரும் இல்லாதோரும் பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவுகளை மேற்கொள்ள வருபவர்கள் தத்தமது குடும்ப அட்டைகளை தவறாது தம்முடன் எடுத்து வருமாறு போக்குவரத்து கண்காணிப்புப்பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் உரிமையாளர்களைக் கேட்டுக் கொள்கின்றனர்.

### பல்கலை.

குழுவின்செயலாளருக்கும்உயர் கல்வி அமைச்சுக்கும் சிறிலங்கா ஜனாதிபதிக்கும் கையெழுத்திட்ட தனித்தனி மகஜர்களை மேலதிக அரசாங்க அதிபரிடமும் உயர் கல்வி அமைச்சு, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, பரீட்சை ஆணையாளர் ஆகியோருக்கான மகஜர்களை கல்விப் பணிப்பாளரிடமும் கையளித்தனர். (சி)

### முற்பணம்

கங்கள் இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணம் தவிர்ந்த ஏனைய பொருள்களை பொது மக்களுக்கு பணத்திற்கு விற்பனை செய்வது தெரிந்ததே. இத்தகைய பொருள்கள் இதுவரை காலமும் கடனடிப்படையிலேயே சங்கங்களுக்கு வழங்கப்பட்டன.

ஆனால் இனிமேல் பல நோக்குகூட்டுறவுச் சங்கங்கள் இலவச நிவாரணம் தவிர்ந்த ஏனைய பொருள்களை பெற்று விற்பனை செய்ய விரும்பினால் அப் பொருள்களுக்கான பணத்தை முன் கூட்டியே செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பண உதவியை வழங்க திறைசேரி மறுத்து விட்டதாலேயே மேற்படி நடைமுறை கடைப்பிடிக்கப் படவுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் நாயகம் அறிவித்துள்ளார். (ச)(பா)

### அநுராவுக்கு

தற்போது வெளிநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அநுரா பண்டாரநாயக்க நாடு திரும்பியதும் அவரிடம் இது பற்றி கலந்துரையாடப்படும் என ஐ. தே. க. வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.


## நன்றி

ஒரு வருடத்திற்கு முன்னர் கிளிநொச்சி கணேசபுரத்தில் களவுபோன எனது C. D 50 மோட்டார் சைக்கிளினை தமிழீழ காவல் துறையின் குற்றப்புலனாய்வு பிரிவினர் தற்பொழுது கண்டுபிடித்து என்னிடம் ஒப்படைத்துள்ளனர். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

75, குமரபுரம் சி. கந்தசாமி
பரந்தன். (6414)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 28.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11463

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-3412, 28-0940, 28-1110, 24-9549, 24-4481, 42-1178, 40-1214, 26-3162, 24-9337, 26-1169, 27-0849, 24-5177, 26 3937, 26-7272, 24-5437, 26 7627, 27 6439, 42 3726, 26 1349, 27 9649, 26-7353, 26-6026, 27-2020, 42-7312, 26-7949, 43 3576.


யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

ROARING FIRE

[முழு நீள கராட்டிச் சித்திரம்]

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30மணி,பிற்பகல் 2. 30 மணி
மாலை 4, 6 மணிக்கு காண்பிக்கப்படும்

(சி-7544)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளைத் தலைமையகம்
வலிகாமம் மேற்குப் பிரிவு

தையல் கண்காட்சியும் விற்பனையும்

இப்பிரிவின் இரண்டாவது தையல் கண்காட்சி 30.10.93, 31.10.93 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

இடம்: யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்

நேரம்: காலை 9-30 – மாலை 5-30 மணி வரை

30-10 93 காலை 10-00 மணிக்கு முதலாம் (1992) அணியில் சித்திபெற்ற பயிலுனர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் அத்தருணம் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் மற்றும் வேறு பிரிவு அன்பர்களையும் அழைக்கின்றோம்.

மாவடி, வட்டுக்கோட்டை, கௌரவ செயலாளர்,
28-10-93 (சி-7801)


## மரண அறிவித்தல்

### திருமதி கனகசபை பாக்கியவதி

திருமதி கனகசபை பாக்கியவதி (ராணி) கொழும்பில் 27-10-1993 அன்று காலமாகிவிட்டார். இவர் சு. கனகசபையின் (உரிமையாளர் விஷ்ணு ரேடிங் கொம்பனி கொழும்பு) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஐ. இராசலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், துஷ்யந்தன் (புனித சம்பத்திரிசியார் கல்லூரி), ஜெயந்தா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), விஷ்ணுகாந் (டொன் பொஸ்கோ) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னலெச்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும், இ. அமரசோதி, இ. சண்முகலிங்கம் (கனடா), இ குகன் (றொலெக்ஸ் கொட்டல்), திருமதி. யோ. புவனேஸ்வரி (நோர்வே), திருமதி. மா. புஸ்பநீலா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி. அ. சந்திரபவானி, திருமதி. ச. சாந்தலெச்சுமி (கனடா), திருமதி. கு. ஜெமீலா, த. யோகலிங்கம் (நோர்வே), சு. மாணிக்கவாசகர் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. அமரசோதி
(சகோதரன்)

இல. 170, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (6422)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது